ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்

புரட்டாதி

2021

285ஆவது மலர்

ஸ்ரீ முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

www.sanneethiyan.org

குறள் வழி

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

பொருள் : கொலைத்தொழில் செய்பவர் தாம் அத்தொழிலின் சிறுமையை அறியாராயினும் அத்தொழிலின் சிறுமையை அறிந்தவர்க்கு அவர் இழிதொழிலினராய்த் தோன்றுவர். (329)

உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொருள் : நோயுடம்புடன் வறுமையோடுகூடிய இழிதொழில் செய்து வாழ்வோர் முற்பிறப்பில் உயிர்களை அவை நின்ற உடம்பினின்றும் நீக்கினவரென்று அறிவுடையோர் கூறுவர். (330)

நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

சிவசிவ என்னச் சிவகதியாமே

கலிவிருத்தம்

பக்தி செய்து பந்தத்தை நீக்கினேன்
பக்தி செய்து பரமனைக் கண்டேன்
பக்தி செய்யும் பாக்கியம் பெற்றேன்
பக்திக் கடலில் படிந்திருந் தேனே 09

ஒன்றை நினைந்தென் னுள்ள மொடுங்கிற்று
ஒன்றை நினைந்தென் னுள்ளங் களித்தது
ஒன்றை நினைந்தென் சிந்தை யுயர்ந்தது
ஒன்றை நினைந்து ஒன்றா னேனே 10

அஞ்செழுத் தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத் தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே 11

அஞ்செழுத் தாலே சஞ்ச லமிழந்தது
அஞ்செழுத் தாலே பஞ்ச மொழிந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Arulmigu Kalaikkovil Gurukkal Somaskanda Accredited Museum. Noolaham.org | Aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 285

2021 பொருளடக்கம் புரட்டாதி

தேர்	திருமதி பொ. திலகவதி	01 - 02
திருவாசகம்	சு. அருளம்பலவனார்	03 - 05
ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களுக்கு...	வி. செல்வரத்தினம்	06 - 08
திருவிளையாடற் புராண வசனம்	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்	09 - 12
விரதம் விரதி	முருகவே பரமநாதன்	13 - 16
வழித்துணை	ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம்	17 - 18
திருஞந்தெழுத்தின்...	பு. கதிரித்தம்பி	19 - 21
திருமூலர் திருமொழி	ஆ.தா.இ ஜெயபாலன்	22 - 23
கார்த்திகைத் தீப...	ஆர்.வீ. கந்தசுவாமி	24 - 25
திருமணப் பந்தலிலே...	திருமதி ஜெ. இராஜேஸ்வரி	26 - 27
நித்திய அன்னப்பணி	சந்நிதியான் ஆச்சிரமம்	28 - 31
போதையின் பாதை	சி. நற்குணலிங்கம்	32 - 33
தமிழ்ப் பெண் கவியரசிகள்	இரா. செல்வவடிவேல்	34 - 39
நாவினால் சுட்ட வடு	து. சிந்துஜா	40 - 41
முருகனின் திருவருள்...	கு. சோமசுந்தரம்	42 - 44
உங்கள் எண்ணமே...	இ. சிவயோகநாதன்	45 - 46
வல்லிநதியில் மூழ்கி...	கே.எஸ். சிவஞானராஜா	47 - 49
வாழ்க்கை கடலில்...	பூ.க. இராசரத்தினம்	50 - 51
அருள்வாய் குகனே	ச. வாகீசன்	- 52

வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:

Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோ முகமுந் - தந்து 76

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப - விரிபுவனம் 77

எங்கும்பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண் 78

எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு 79

பூதத் தலைவகொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொருசற்று 80

அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருஉருவாய் - முன்னர் 81

அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவல் 82

கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் - தன்னிரண்டு 83

கையால் எடுத்தணைத்துக் கந்தவெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவித்துச் - செய்ய 84

முகத்தில் அணைத்துஉச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூக்க அளித்துச் - சகத்தளந்த 85

வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்தோனே - கிள்ளைமொழி 86

மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்
தங்க மடவார் துயர்தீர்த்து - தங்கள் 87

விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு - நெருப்பி லுதித்து 88

அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண் கடாஅதனைச் சென்று கொணர்ந்து - எங்கோன் 89

விடுக்குதி என்று உய்ப்பஅதன் மீதிவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா - படைப்போன் 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் தரும் தகவல்

ஏழ்மை ஒரு மனிதனை வெற்றியாளனாக்குவதற்குத் தேவையான பலத்தை அளிக்கின்றது. நம் ஒவ்வொருவருக்கும் பிறக்கும் சூழல், வளரும் சூழல், வாழும் சூழல் ஆகிய மூன்றுமே நண்பர்களாகவோ, எதிரிகளாகவோ அமைகின்றன. செல்வ வாழ்வை நாம் நண்பராகவும், ஏழ்மை வாழ்வை முக்கிய விரோதியாகவும் நினைத்து வாழத் தலைப்படுகின்றோம். செல்வ நிலையில் வாழ்பவர்கள் எல்லா வசதிகளுடன் இருப்பதால் அவர்களுக்கு வருகின்ற சிறுசிறு பிரச்சினைகளைக்கூட தனித்து எதிர் கொள்ளமுடியாமல் வாழ்வினில் சோர்ந்து போகின்றார்கள். ஏழ்மையில் பிறந்து நேர்மை யுடன் வாழ்பவர்கள் தமக்கு வருகின்ற இடர்பாடுகளை உள்வாங்கி அவற்றினின்றும் மீண்டு வெற்றியாளர்களாக மாறி விடுகின்றார்கள்.

இன்றைய காலத்தில் செல்வச் செழிப்புடன் எப்படி வாழ்ந்தாலும், அப்படி வாழ்பவரை பெரிதாக மதித்தும், நேர்மையாக ஏழ்மையில் வாடுகின்ற வறியவரை வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள்போல எண்ணி எடைபோட்டு மதிக்கிறோம் அல்லது மிதிக்கிறோம். எமக்கு வருகின்ற செல்வச்செழிப்பு நமது சுற்றத்தையும், உற்றார் உறவினர்களையும், ஏன் தாய் தந்தையைக்கூட விரட்டி அடிக்கும். தரமற்ற புதிய நண்பர்களைச் சேர்க்கும். இத்தகைய செயற்பாட்டின்மூலம் உயர்ந்த நிலையில் இருக்கும் நாம் தாழ்ந்த நிலையை அடைகின்றோம்.

வறுமையோ வளமான வாழ்வோ எதுவாக இருந்தாலும் எவரொருவர் எந்தவிதச் சூழலையும் தனக்கு சாதகமாக மாற்றி எதிர்கொள்கின்றாரோ அவரே வாழ்வில் சாதனை படைக்கின்றார். வறுமையை வெல்வது வேறு, வாழ்க்கையை வெல்வது வேறு நேர்மையற்ற முறையில் செல்வச் செழிப்பில் மிதப்பவர்கள் காலப்போக்கில் செல்வத்தை இழந்து, மானத்தை இழந்து, வாழ்வைத் தொலைக்கின்றார்கள். நேர்மையாக வறுமையுடன் வாழ்ந்த எவரும் வாழ்வைத் தொலைத்ததாகச் சரித்திரம் இல்லை.

சந்தர்ப்ப வசத்தால் ஏழ்மை நிலையில் வாடுகின்றவர்கள் செல்வச் செழிப்பில் வாழ்பவர்களைப் பார்த்து மனக்கிலேசமுறாமல் தனது முன்னேற்றத்திற்கான முயற்சியினை மேற்கொண்டு வந்தாலே வறுமையினின்றும் மீளலாம் வாழ்க்கையிலும் உயரலாம்.

எமது நிலையை அறிந்து எந்தச் சூழலும் எம்மை மாற்ற முடியாத மனத்திடத்தை நமக்கு அளிக்க இறைவனை வேண்டி மண்ணில் நல்ல வண்ணம் வாழ முயற்சிப் போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானின் திருவடி வாழ்க

சந்நிதிக் கந்தனை சண்முக நாதனை
வந்தனை செய்மனமே - அவன்
மலரடி தொழு தினமே.

எந்நிதி வேண்டினும் சந்நிதி யானைவேண்டில்
யாவையும் பெற்றிடலாம் - அவனை
என்றென்றும் எண்ணித் தொழலாம்.

கார்த்திகையில் கார்த்திகைநாள் கந்தனைத் தொழுதேத்தினால்
நேர்த்தியா யெல்லாம் பெறலாம் - நாங்கள்
நினைத்தன யாவுந் தருவான்.

வெள்ளிநாள் விரதத்தை வேண்டியே ஆண்டுதோறும்
புள்ளிமயிலோனைக் கும்பிட்டால் - நாங்கள்
போதுமென்ற மனத்தில் வாழலாம்.

கந்தசஷ்டி விரதத்தை கட்டாயம் நோற்றால்
மைந்தர்களைப் பெற்று வாழலாம் - மனத்தில்
மகிழ்ச்சி பொங்க வீற்றிருக்கலாம்.

ஒழுக்க முடையவர்கள் வழுத்திச் சந்நிதியானை
உள்ளத்தில் வைத்துப் பூசித்தால் - அவன்
விழுப்பமாய் வாழ்வில் மகிழலாம்.

அன்னக்கந் தனென்றுலகோர் சந்நிதிக் கந்தன்தனை
ஆலயம் நோக்கித் தொழுவார் - தொழுவோரை
மன்னவ ராக்கி விடுவான் அவன்.

எங்கே சென்றிருந்தாலும் அங்கே அவனைக் கூவின்
தங்காமல் சென்றே ஏனென்பான் - அவர்கள்
இதயத்தை மலரச் செய்வான்.

கந்தனை எந்தநாளும் வந்தனை செய்தவர்கள்
சிந்தை சிறக்க வாழ்வார் - அவரை
கருணையால் வாழ வைப்பான்.

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

Dr. K. இராதாகிருஷ்ணன்

(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

இராசையா குகதாசன்

(யாழ்ப்பாணம்)

சி. கனகசபை

(யாழ்ப்பாணம்)

அ. மகேந்திரராசா

(மல்லாகம்)

சி. செல்லையா

(கரவெட்டி)

M.S.K. மகேஸ்வரன்

(கொக்குவில்)

சி. சிவநேசன்

(கொக்குவில்)

வ. கதிர்காமநாதன்

(சுண்ணாகம்)

S. மகாதேவன்

(உரும்பராய்)

க. காசிநாதர்

(நீர்வேலி)

K.S. கணபதிப்பிள்ளை

(கைதடி)

தி. கோபாலகிருஷ்ணன்

(புத்தூர்)

உரிமையாளர்

(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. தர்மராசா

(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

செ. புவனேந்திரராசா

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

செல்லையா சிவசம்பு

(இளை.அதிபர், வளலாய்)

த. சிவகுருநாதன்

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

காரை. M.P அருளானந்தன்

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

ப. நடராசாக்குருக்கள்

(ஆவரங்கால், புத்தூர்)

இ. ராதாகிருஷ்ணன்

(ஏழாலை மத்தி, ஏழாலை)

க. ஸ்ரீஸ்கந்தராசா

(இளை. அதிபர், அச்சுவேலி)

சோ. தனராசா

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

நாகேந்திரம் கண்ணம்மா

(மானிப்பாய்)

வ. கந்தசாமி

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

சி. சிவச்செல்வம்

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

கு. மதனமோகன்

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

ஆ. திருநாவுக்கரசு

(இணுவில் மேற்கு)

நா. கனகலிங்கம்

(தபால் வீதி, கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B.R. ரஞ்சன்

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

சி. லிங்கேஸ்வரி

(மதவடிலேன், சுதுமலை)

சு.சண்முகசுந்தரம்

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

க. தெய்வானைப்பிள்ளை

(V.M. றோட், பருத்தித்துறை)

பார்த்தசாரதி விஜயகுமார்

(சுழிபுரம்)

திருமதி. ப. தேவமனோகரன்

(கந்தபுஷ்கரணி, நவாலி)

அ. ஆறுமுகம்

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

கயிலைநாதன் மங்களகாந்தி

(வேழலகம், ஆனைக்கோட்டை)

இ. இந்திரலிங்கம்

(இணுவில் கிழக்கு)

இ. சர்வேஸ்வரன்

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

த. விசயகுமாரன்

(பழம்றோட், கந்தர்மடம்)

செல்வி.சு. பகீரதி

(செட்டித்தெரு, நல்லூர்)

கனகேஷ்வரன் பிரகாஷ்

(கைதடி கிழக்கு)

சி. செல்வரத்தினம்

(நீர்வேலி)

ஐ. ராமச்சந்திரா

(லவ்லேன், உடுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சகுந்தலாதேவி

(வங்களாலேன், மல்லாகம்)

அ. ராஜ்சங்கர்

(உரும்பராய்)

ம. நாகேஸ்வரி

(நவிண்டில்)

த. லதாசந்திரிக்கா

(மகாத்மா வீதி, நெல்லியடி)

க. நற்குணராஜா

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

செ. இராஜேஸ்வரி

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

ஜெயா

(உப அஞ்சல் அதிபர், நீர்வேலி)

த. பூபாலன்

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

கா.ஆ. சச்சிதானந்தம்

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

தினேஸ் கவிதா

(ஆவரங்கால்)

க. சிவசுப்பிரமணியம்

(கோப்பாய்)

நா. கமலநாதன்

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

செ. சோதிப்பெருமாள்

(சரஸ்வதி மஹால், இணுவில்)

சி. வேலாயுதம்

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்

–திருமதி பொ. திலகவதி அவர்கள்–

தமிழரின் தெய்வீக கலைப் படைப்புக் களில் சிறந்தது தேர். இப் பரந்த உலகையும் அதை வழிநடத்துபவன் இறைவன் என்ற பேருண்மையையும் உணர்த்த கலை வல்லு நர்களால் உருவாக்கப்பட்டதே தேர். இந்த தேர் உலக இயல்புகள், வாழ்க்கை முறை களின் தன்மைகள் ஆகியவற்றை நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளால் தேரின் பல பாகங் களிலும் விளக்குகின்றன. அடிப்பாகச் சக்கரங் களில் இருந்து கலசம் வரை சமய தத்துவங் கள், புராண இதிகாச வரலாறுகள், தெய்வ லீலைகள் ஆகியவற்றால் விளக்கப்பட்டுள்ள கலைக்கூடமாக விளங்குவது தேர். ஆலயங் களில் நிகழும் மகோற்சவத்தில் தேர்த் திரு விழா தனிச்சிறப்பு வாய்ந்தது. தேர்த் திருவிழா இறைவனுக்குரிய ராஜ உபசாரம் ஆகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண் டாம் என்பதுபோல் தேர் ஓடாத தெருவில் குடியிருக்க வேண்டாம் என்றும் ஒரு பழமொழி உண்டாம்.

இறைவன் அதி உன்னத விசித்திர அலங்காரம் பெற்று இரதத்திலேறி இருக்கும் காட்சியைப் பார்க்க அடியார்களுக்கு இம் மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் தருவ தாகும். ஆயிரம் கண்கள் இருந்தாலும் பார்த்து உவகையடைய போதுமானதோ? அந்த இறை வனைக் காணாத கண் என்ன கண்ணோ? தொழாத கரம் என்ன கரமோ? அவன் நாமம் துதிக்காத நாவென்ன நாவோ? அவனை நினைக்காத நெஞ்சமென்ன நெஞ்சமோ? அடி யார்கள் புடைசூழ நிற்க மலைபோல் தேங் காய்களை தேரின் முன்னால் குவிப்பார்கள். இறைவன் அற்புத சகல அலங்காரத்துடன் வீதி உலாவத் தொடங்க மலைபோல் குவித்த தேங்காய்களை உடைப்பார்கள். இது அடி யார்களின் பாவங்கள் எல்லாம் சிதறி ஓடச் செய்யும். இறைவன் விசித்திர அலங்காரம் அமைக்கப்பெற்று இரதத்திலேறி அடியவர்கள் புடைசூழ சகல உபசாரங்களுடனும் திரு மறை பாராயணம் மங்கள வாத்தியங்கள் சகிதம் வருவார். இந்த மக்களெல்லாம் ஒன்று கூடி வேற்றுமையின்றி வடம் பிடித்து தேர் இழுப்பதைக் கண்ட ஆண்டவன் அவர்களை விட்டுப் பிரியாதவன்போல் ஆங்காங்கே நின் றும் பின் பைய இயங்கியும் செல்வான். கோயிலுக்குப் போக முடியாதவர்கள், போகா தவர்கள் இவர்களையும் தடுத்தாட்கொள்ள அவர்கள் வீடுதோறும் எழுந்தருளுவதுபோல் திருவிழா உலா வருகிறார்.

இறைவன் கோயில் வடிவிலே அமைக்கப்பட்ட தேர் நகரும்போது கோயிலே நகர்வது போன்ற மன உணர்ச்சி உருவாகி றது. தேர்த் திருவிழா சங்கார கிருத்திய அழித்தலைக் குறிக்கும். இங்கே அழித்தல் என்பது மும்மலங்களையும் ஒடுக்கி ஆறுதல் அளித்தல் என்று பொருள்படும். இறைவன் தேரிலிருந்து ஆரோகணித்து பச்சை சாத்திய திருக்கோலத்தில் மீண்டும் திருக்கோயிலுக்குச் செல்வார். இறைவன் பச்சை சாத்திய திருக் கோலத்தில் திருக்கோயிலுக்குள் எழுந்தருளு தல் அனைவருக்கும் அருள்புரியும் சதாசிவ மூர்த்தி தானே என்பதையும் காட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய விழாவாக தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப் பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பதைப் போல் நமக்குள்ளும் இறைவனின் பிம்பம் இருக்கிறது. தேரை இழுப்பதைப் போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. ஊர்வலம் முடிந்தவுடன் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கை முடிந்த நமது ஆத்மாவும் அதுவரை வாழ்ந்த உடலைவிட்டு இறைவனிடம் திரும்பிவிடுகிறது.

கோயிலும் தேரும் இறைவன் உறை யும் இடம். தேர் அனைத்து மக்களையும் சந்திக்க வைத்து உறவாட வைக்கும் ஒரு சமுதாய கேந்திரமாகவும் பயன்படும். உயர்ந்த எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள பயன் படும். ஊரை ஒற்றுமையாகக் கூட்டி வைக்க கூடிவாழச் செய்ய மக்களின் ஒற்றுமை சின்ன மும் தேர் ஆகும். மக்களுக்கு ஆனந்தத்தை யும் பக்தியையும் இது ஏற்படுத்தும். அது போல் இன்னுமொன்று, ஆண்டுதோறும் தெரு வில் தேர் ஓடுவதால் தெருப்பராமரிப்பு நடக் கும், வியாபாரம் பெருகவும், சிறு வியாபாரி கள் பயன் அடையவும், குடிசைத் தொழில் செய்பவர்கள் விற்பனை செய்யவும் வாய்ப்பு கிடைக்கிறது.

இப்படியான தேரை அன்பு நிறைந்த உள்ளத்துடன் நம்பிக்கையோடும் பக்தியோடும் வணங்கி இறைவனின் அருளைப் பெறுவோமாக.

இன்பமும் துன்பமும்

உலகில் வாழும் உயிரினங்கள் பல கோடியாகும். அவற்றுள் மனித இனம் மேலானது. தொழில்களைத் திறன்படச் செய்வதற்கான துணைக் கருவிகளையும், ஆராய்ச்சிக்கு விஞ்ஞான அறிவோடு நுண்கருவிகளையும் உபயோகிக்கக்கூடிய வகையில் உடல் உறுப்புக்கள் மனிதனிடம் அமைந்துள்ளன. மேலும் ஊறு, ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய ஐந்தையும் உணரும் ஐயுணர்வோடு, மனம், உயிர், மெய் எனும் மூன்று மறை பொருட்களை உணரத்தக்க ஆறாம் அறிவும் மனிதனிடம் அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புக்களை உணரும்போது தான் ஒரு பேருண்மை தெளிவாகின்றது. இயற்கையே தன் பரிணாமத்தின் உச்சக்கட்டமாக மனித வடிவில் வந்து, தனது இயல்புகளை ரசித்தும், பெருமைகளை உணர்ந்தும் நிறைவு பெறுகிறது என்ற உண்மை விளங்குகிறது. இவ்வளவு சிறப்புக்களையும் பெற்ற மனிதனின் பிறவி நோக்கம், தனது அறிவில் முழுமை பெற்று, இயற்கையின் சிறப்பு உணர்ந்து அமைதியும், நிறைவும் பெறுவதேயாகும். மனிதனுடைய வாழ்வில் துன்பங்கள் மிகுமேயானால் பிறவியின் நோக்கமாகிய அறிவின் வளர்ச்சி தடைப்படும். அறிவானது அமைதியான வழியில் இயங்க நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இயற்கையாக எழும் தேவைகள் மூன்று. அவை:- பசி, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு உணர்வு, உடல் கழிவுப்பொருட்களின் உந்துவேக உணர்வு. இந்த மூன்று உணர்வுகளையும் காலத்தோடும், அளவோடும், தக்க பொருட்களையும், வசதிகளையும் கொண்டு நிறைவு செய்துகொண்டேயிருக்க வேண்டும். மேலே விளக்கப்பெற்ற பசி உணர்வு, வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வு உணர்வு, உடல் கழிவுப்பொருட்களின் உந்துவேக உணர்வு இவைகளைக் காலத்தோடு நிறைவு செய்யாவிட்டால், உடலில் அமைதி குலைந்து நலம் கெட்டுத் துன்ப உணர்வுகளாக மாறும்.

இயற்கைத் துன்பங்களை அவ்வப்போது சமன்செய்துகொண்டே இருப்போமானால் மிகுதி இருப்பது என்ன? அமைதியும், இனிமையும் தாமே! அமைதியே அறிவு ஆராய்ச்சிக்கும், உயர்வுக்கும் ஒத்ததாகும். எனவே, அமைதி காப்பது என்பதே மனிதனின் தலையாய செயல்.

தோல்வியைப் ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம்

(தொடர்ச்சி...

நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்–

(யாழ்ப்பாணம் – காரைநகர்)

139. பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரம்
பொரும்பெரு மான்வினை யேன்மன மஞ்சிப் பொதும்புறவே.

ப-ரை:

மெல் முயல் கறையின் அரும்பு அர நேர் வைத்து அணிந்தாய்- மென்மையாகிய முயற்களங்கத்தையுடைய திங்களின் அரும்பு போன்ற பிறையைப் பாம்பினுக்கு நேராக வைத்துச் சடையில் அணிந்தவனே, பெருமான்- சிவபெருமானே, பிறவி ஐ வாய் அரவம்- பிறவித் துன்பமாகிய ஐந்து வாய்களையுடைய பாம்பு, வினையேன் மனம் அஞ்சி பொதும்பு உற பொரும்- பிராரத்த வினையுடையேனது உள்ளம் அச்சம் அடைந்து உட்டுளை பொருந்தும்படி தாக்கி விடத்தைக் கக்குகின்றது. பரம்பரனே- மிக மேலோனே, நின் பழ அடியாரொடும் என் படிறு விரும்பு அரசனே- நின்னுடைய பழைமையான அடியவர்களது மெய்யடிமையோடு எனது பொய்யடிமையினையும் ஒப்ப விரும்பி ஏற்றுக்கொண்ட சங்கார காரணே, விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

முயற்கறையினையுடைய திங்களின் அரும்பு போன்ற பிறையைப் பாம்பினுக்கு நேராய் வைத்து அணிந்தவனே, பெருமானே, பிறவித் துன்பமாகிய ஐவா யரவம் வினையேன் மனம் அஞ்சிப் பொதும்பு உறும்படி பொரும்பரம்பரனே, நின்பழவடியார் மெய்யடிமையோடு பொய்யடிமையினையும் ஒப்ப விரும்பி ஏற்றுக்கொண்ட அரனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

என்படிறு எனப் பின்வருதலின் பழவடியாரொடும் என்பதற்கு பழவடியார்களது மெய்யடிமையோடு என உரைக்கப்பட்டது. படிறு என்பது ஈண்டு பொய்யடிமை, படிறும் என உம்மை விரிக்க. அரன்- மும்மலங்களை அழிப்பவன்; மேல் என்னும் அடை முயலுக்கும் பிறைக்கும் பொருந்தும் முயற்கறை- முயல்போலும் களங்கம், அது உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் திங்களை உணர்த்தியது. அரும்பு- முகிழ். முகிழ் போன்ற முதிரா இளம் பிறையை "முகிழ் வெண் டிங்களுந் தங்கு சடையன்" (ஞான 74:5) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. அரா, அர எனக் குறுகிற்று. "குருமணிசேர் அர வைத்தார்கோலம் வைத்தார்" (தே. நாவு 227:8) என்புழிப்போல். நேர்- எதிர். திங்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு எதிர் எனக்கோடல் சோதிடநூல் வழக்கு. நேர் வைத்து அணிதல்- எதிரானவற்றை ஒருங்கு வைத்து அணிதல்.

"பாம்பொடு திங்கள் பகை தீரத்தாண்டாய்" நாவு 312:2.
"வெண்திங்கள் பற்றிப் பாம்புடன் வைத்த பராபரன்" நாவு 185:9.
"முடிக்கொண்டார் முளையிள வெண் திங்களோடு
மூசும் இளநாகம் உடனாகக் கொண்டார்" நாவு 309:3.

எனத் தேவாரத்து வருதலும்

"அரவும் பிறையும் அணியுறக் கொண்டவன் பிறைக்குப் பகையாகிய
அரவையும் பிறையையும் அழகுறத் தனக்கு அணியாகக் கொண்டவன்"
-திருக்கோவையார் 359 பேர்.

"மாமதியின் அயல் வந்த ஆடர வாட வைத்தோன் ஏதங்குறித்து
வந்த ஆடரவைப் பெருமையையுடைய பிறையின் பக்கத்து
அதனை வருத்தாமற் செய்து ஆடவைத்தவனது"
-திருக்கோவையார் 381 பேர்.

"அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
இளநிலா வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ்ப் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவும்
ஒண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டிறை மருங்கிற் றனிவிளை யாட
உடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவுள்"
-திருவாரூர் நான்மணிமாலை 21:1-7.

என வருவன காண்க.

பிராரத்தவினை உள்ளவரையும் பிறவித் துன்பம் உளதாகலின் அத்துன்பத்தின் கொடுமை நோக்கி அதனை ஐவா யரவம் என உருவகஞ் செய்தார். பிறவித் துன்பம் உளதாதற்கு ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் ஏதுவாகலின் அதற்கு இயைய அரவத்திற்கும் ஐந்து வாயைக் கூறுவாராயினர். "ஐவா யரவணை", "ஐந்தலைய மாசுணம்" (நாவு 74:10; 226:3) எனத் தேவாரத்தும் வருவன காண்க. அரவம் பொருதல்- அரவம் தாக்கி விடம் கக்குதல். பொதும்புறல் என்றது அரவம் பொருதலினாலே உள்ளே பொந்து உடைத்தாதல்; என்றது மனம் உள்ளீடின்றித் தன்நிலைமை கெடுதல்.

இதன்கண், "வினையேன் மனம் அஞ்சிப் பொதும்புற பிறவி ஐவாயரவம் பொரும்; நின்பழவடியாரொடும் என்படிறு விரும்பும் அரனே, விட்டிடுதி கண்டாய்" என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 35.

140. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற் றாரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தடலரசே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப-ரை

விரை ஆர் நறவம் ததும்பும் மந்தாரத் தில்- நறுமணம் பொருந்திய தேன் நிறைந்த மந்தார மலரின்கண், தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு- எடுத்த விசையைப் பாடிப் பின் படுத்த விசையை ஒலிக்கும் வண்டுகளும், அதும்பும் கொழும் தேன்- அவற்றைக் கண்டு ஒதுங்கும் கொழுவிய தேனீக்களும் பொருந் திய, அவிர்சடை வானத்து அடல் அரசே- விளங்கும் சடைமுடியினையுடைய சிதாகாயத் தின் கண் தங்கிய வரம்பிலாற்றலையுடைய அரசனே, பொதும்பு உறு தீ போல் புகைந்து எரி- மரப்பொந்திற் பொருந்திய நெருப்பைப் போல புகைந்து எரிகின்ற, அப்புலன் தீ கதுவ- அப்புலன்களாகிய நெருப்புப் பற்றிக் கொள்ள, வெதும்புறுவேனை விடுதி கண் டாய்- வெதும்புகின்ற என்னைக் கைவிடுகின் றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வானத்தடலரசே! ஐம்புலன்களாகிய நெருப்புப் பற்றிக்கொள்ள வெதும்புகின்ற வனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பொதும்பு- மரப்பொந்து, பொதும்புறு தீப்போல் புகைந்தெரி என்றது மரப்பொந் தினுள்ளே பற்றிய நெருப்பு அப்பொந்தின் வழியாகப் புகைந்து கொண்டு எரிவது போலப் புகைந்து எரிகின்ற என்றவாறு, எரி தீ என இயையும். அப்புலன் தீக் கதுவ என்புழி அ என்பது பண்டறி சுட்டாய் ஐம்புலன்களின் தீமையையுணர்த்தியது. "ஐவர் தீய செய் வினை பலவுஞ் செய்ய", "ஐவர் வந்து முறை முறை துயரஞ் செய்ய" (நாவு 52:9; 52:8) எனத் தேவாரத்தும் வருவன காண்க. "பிறவி ஐவாயரவம் பொரும்.... மனம் அஞ்சிப் பொதும் புறவே" (நீத் 35) என முன்னர்த் திருப்பாட்டிற் கூறினமையால் அப்பொதும்பில் ஐம்புலன் தீக் கதுவலின் வெதும்புகின்றேனை என்றார்.

மந்தாரம் என்பது முதலிற் கூறும் சினையறி கிளவியாய் தொல்வேற். (மயங்கு 31) மந்தார மலரை உணர்த்தியது. மந்தார மலரின் கண் வண்டுந் தேனும் தங்கிய சடை என்க. தாரம்- உச்சவிசை; மந்தம்- மந்த ஓசை. "மந்தம் முழவுங் குழலு மியம்பும்" (தே. சுந் 4:10) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வண்டு மந்தம் முரலல், "வண்டு மந்தம் மலி யம்பர்" (ஞான 83:4) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. வண்டு தாரம் மந்தம் என்னும் இசைவேறுபாடுகளை இசைப் பதாகக் கூறுவது கவி மரபு. "காரடைந்த சோலை சூழ்ந்து காமரம் வண்டிசைப்ப", "சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு வேறாய உருவாகிச் செவ்வழி நற் பண்பாடும் மிழலை" (தே. ஞான 47:3; 132:7) என வருவன காண்க. அதும்புதல்- ஒதுங்குதல் என்றது தாரம் மந்தம் இசைக்கும் ஆண் வண்டினைக் கண்டு அதற்கு முன் அம்மலரில் படிந்துள்ள கொழுத்த பெண் தேனீ ஒதுங்குமென்க. வானம்- சிதகாயம். அடல்- வரம்பிலாற்றல். அரசு- இறைவன்.

இதன்கண், புலன் தீக்கதுவ வெதும் புறுவேனை விடுதிகண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 36.

(தொடரும்...

தண்ணீர் வைக்கப்படும் பாத்திரத்தின் அடியில் மிகச் சிறிய ஓட்டை இருந்தாலும், பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே போய்விடும். அதுபோல் சாதகனிடம் உலகப் பற்று சிறிது இருந்தாலும் அவனுடைய ஆன்மிக முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும்.

நீண்ட நேரம் ஓடிவந்தால் அதிக தூரம் தாண்ட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களுக்கு ஒரு கஷ்டமும் வராமாட்டாது

–திரு வி. செல்வரத்தினம் அவர்கள்–

துரியோதனன் 12 வருட வனவாசத்தில் இருக்கும் பாண்டவர்களை அழிக்கும் தீய எண்ணத்துடன் இருந்து வந்தான். இப்படி இருக்கும் காலத்தில் ஒருநாள் துருவாச முனிவர் தனது எண்ணற்ற சீடர்களையும் அழைத்துக்கொண்டு துரியோதனனின் அரண்மனைக்குச் சென்றார். துரியோதனன் அவர்களை வரவேற்று, துருவாச முனிவரையும் அவரது எண்ணற்ற சீடர்களையும் நன்கு உணவளித்து உபசரித்தான். எனவே, துருவாச முனிவர் மிகவும் திருப்தியடைந்தார்.

"துரியோதனா! அருமையான உணவு அளித்து எங்கள் அனைவரையும் நன்கு உபசரித்தாய். உனக்கு வேண்டும் வரம் கேள்" என்றார் துருவாச முனிவர்.

துரியோதனன், "சுவாமி! எங்கள் அண்ணன் தருமர் தம்பிகளுடன் வனத்தில் இருந்து வாடி வருந்துகிறார். எனது விருப்பம், தங்களுக்கு விருந்தளிக்கும் பேற்றை அவரும் பெறவேண்டும். எனவே, தயவுசெய்து திரௌபதி சாப்பிட்டு முடித்தபின் நீங்கள் உங்கள் சீடர்களுடன் அங்கு சென்று உணவு அருந்த வேண்டும். அது நன்றாக இருக்கும்" என்றான்.

துரியோதனனின் தீய நோக்கம் துருவாச முனிவருக்குத் தெரிந்தது. இருந்தாலும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களான பாண்டவர்களை வனத்தில் துருவாச முனிவர் தனது சீடர்களுடன் காணச் சென்றார்.

தருமரைக் கண்டவுடன், "மகனே! வெகு தூரத்திலிருந்து வருகிறோம். பசியோடு உள்ளோம். உன் விருந்தோம்பலை நான் அறிவேன்" என்றார் துருவாச முனிவர்.

"ஆம் மகரிஷியே! இன்று இந்த ஏழையின் குடிசை பாக்கியம் பெற்றது. நதியில் நீராடிவிட்டு வாருங்கள் உணவு தயாராக இருக்கும் சுவாமி" என்றார் தருமர்.

எப்படி இவர்களால் இத்தனை பேருக்கும் உணவளிக்க முடியும் என்ற சந்தேகம் துருவாச முனிவரின் மனதில் எழுந்தது.

குடிசைக்குள் இருந்த தருமரிடம் போய் திரௌபதி, "நீராடச் சென்ற மகரிஷியும் அவரது சீடர்களும் வரும்போது உணவளிக்க வேண்டும். என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறதே?" என்று கூறினாள். அதற்குத் தருமர், "ஆதவன் அளித்த அட்சய பாத்திரம் இருக்கும்போது நமக்கென்ன கவலை? ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்றார். அதற்குத் திரௌபதை, "நாம் அனைவரும் உண்டு முடித்து விட்டோம். மேலும் அட்சய பாத்திரத்தைத் தேய்த்துக் கழுவி வைத்துவிட்டேனே! அட்சய பாத்திரத்திலிருந்து ஒருநாளைக்கு ஒருமுறைதானே உணவு பெறமுடியும்!" என்றாள்.

திரௌபதை கூறியதைக் கேட்ட தருமர், துருவாச முனிவர் மிகுந்த கோபக்காரர். என்னசெய்வதென்று தெரியாமல் இருக்கிறதே என்று கவலையுற்றார். தருமரின் கவலையை உணர்ந்துகொண்ட திரௌபதை, உடனே கண்களை மூடிக் கண்ணபிரானை நினைத்துப் பிரார்த்தனை செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணா! அன்று கௌரவர் சபையில் வைத்து என் ஆடைகளைக் களைந்த போது உடனே எனது மானத்தைக் காப்பாற்றினாய். இன்று எனக்கு உன்னைத் தவிர வேறு கதியில்லை. நான், பசித்து வரும் துருவாச முனிவருக்கும் அவருடைய சீடர்களுக்கும் உணவு எப்படிக் கொடுப்பேன்? எனது அட்சய பாத்திரத்தைத் தேய்த்துக் கழுவி வைத்து விட்டேன். எனவே, எப்படியாவது அவர்களின் பசியைப் போக்க வேண்டும் பிரபு" என்று வேண்டினாள்.

உடனே துவாரகையில் கண்ணனின் மாளிகையிலிருந்த ஊஞ்சலிலிருந்து திடீரென்று கண்ணன் எழுந்து புறப்பட்டான். "சுவாமி! இவ்வளவு அவசரமாக எங்கே புறப்பட்டுப் போகிறீர்கள்?" என்று அவரது மனைவி ருக்மணி கேட்டாள். அதற்குக் கண்ணன், "திரௌபதைக்கு ஓர் ஆபத்து. அவளுக்கு உதவ நான் உடனே போக வேண்டும்" என்றான். திடீரென்று கண்ணன் திரௌபதையின் முன் போய் நின்றான். "திரௌபதை எனக்குப் பசியால் உயிர் போகிறது. உணவு ஏதாவது கொடு" என்று கேட்டான் கண்ணன். அதற்குத் திரௌபதை, "நீயுமா எனக்குக் கவலை கொடுக்கிறாய் கண்ணா? அட்சய பாத்திரத்தைக் கழுவி வைத்துவிட்டேனே? இனி உணவு எப்படிக் கிடைக்கும்?" என்றாள்.

"அட்சய பாத்திரத்தைத் தேய்த்துக் கழுவி விட்டாய். ஆனால், அட்சய பாத்திரத்தைக் கவனமாக எடுத்துப் பார். எனக்குப் பசிக்கிறது. எதற்கும் பாத்திரத்தைக் கொண்டு வா பார்ப்போம்" என்றான் கண்ணன்.

"நான்தானே அட்சய பாத்திரத்தைத் தேய்த்துக் கழுவிப் போட்டேன் கண்ணா" என்றாள் திரௌபதை. "நீ அதனை எடுத்து வா" என்று திரௌபதையிடம் கூறினான் கண்ணன். அவள் அட்சய பாத்திரத்தை எடுத்து வந்தாள். அதில் ஒரு சிறு உணவுப் பருக்கை இருந்தது. "இந்தா திரௌபதை! அட்சய பாத்திரத்தின் மூலையில் ஒரு சோற்றுப் பருக்கை ஒட்டிக்கொண்டிருக்கிறது. அது எனது பசிக்குப் போதும்" என்றான் கண்ணன்.

ஆம்! யாகங்களால் திருப்தியடையும் பிரபஞ்ச நாராயணனான பகவான் ஹரி திருப்தி அடைந்தான். அதனை உண்டவுடன் அவனது பசி தீர்ந்தது.

"கண்ணா! என் கஷ்டம் உனக்குத் தெரியாதா? துருவாச முனிவரும் அவரது சீடர்களும் உணவுண்ண இங்கே வருகிறார்கள். நான் என்ன செய்வேன் கண்ணா?" என்று கேட்டாள் திரௌபதை.

"இவ்வளவுதானா? கவலைப்படாதே! அவர் மனதார உன்னை வாழ்த்திவிட்டுப் போவார். கவலைப்பட வேண்டாம்" என்று கண்ணன் கூறினான்.

பின்னர் கிருஷ்ணன் கூற, சகாதேவன் துருவாச முனிவரையும் அவரது சீடர்களையும் அழைத்துவர நதிக்கரைக்குச் சென்றான். அங்கே நீராடி முடித்ததும், அவர்கள் ஒருவருக்கும் பசி இருக்கவில்லை. இதென்ன ஆச்சரியம்! அறுசுவை உணவு உண்டது போல வயிறு நிரம்பிவிட்டதே! துருவாச முனிவர் சீடர்களை நோக்கி, "சீடர்களே! எனக்கு இப்போது தெரிகிறது இது கண்ணனின் திருவிளையாடல். எனவே தவசீலர்களான பாண்டவர்களிடம் சென்று உணவு உண்ண வேண்டாம். நாம் திரும்பிப் போவோம்" என்றார்.

இந்த நேரம் நதிக்கரைக்குச் சகாதேவன் வந்து "மகரிஷியே! நமஸ்காரம். உங்களுக்காக ஸ்ரீ கிருஷ்ணரும் என் சகோதரர்களும் காத்திருக்கிறார்கள்" என்று கூறினான்.

கிருஷ்ணன் அழைக்கிறான் என்றதும் துருவாசர் சற்று நடுங்கினார். பிறகு அவரும் சீடர்களும் வயிறு நிறைந்து நடக்கமுடியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்துபோய்க் கிருஸ்ணரைச் சந்தித்தார்கள். "பகவானே! என்னை மன்னியுங்கள். துரியோதனின் தீய நோக்கத்திற்கு ஆளாகி இப்படி ஒரு தகாத காரியத்தைச் செய்துவிட்டேன். அதற்கு நாங்கள் இந்தத் தண்டனையை அனுபவித்து விட்டோம்" என்றார். பகவான் அனைவரையும் மன்னித்து ஆசீர்வதித்தார்.

"பாண்டவர்களே! உங்கள் அனைவருக்கும் என் ஆசிகள். ஸ்ரீ கிருஷ்ணரிடம் உங்களுக்கு பக்தி இருக்கும் வரையில் எந்தத் தீங்கும் உங்களுக்கு வராது" என்று துருவாசர் பாண்டவர்களை ஆசீர்வதித்து வாழ்த்தி விட்டு, திருப்தியோடு சென்றார். அவரது கோபம் துரியோதனனின் புண்ணியத்தைக் குறைத்தது.

ஸ்ரீ கிருஷ்ணர் சாப்பிட்ட ஒரு சோற்றுப் பருக்கையால் துருவாச முனிவரும் அவரது சீடர்களும் பசியாறித் திருப்தியோடு சென்றனர். இதிலிருந்து தெரிகிறது, எல்லா உயிர்களும் கண்ணனிடம் அடக்கம் என்று.

பாண்டவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் எவ்வளவு கொடியனவாக இருந்தாலும், ஒரு நிமிடமும் அவர்களுடைய ஞான ஒளி மங்கியதில்லை.

ஆதரித்து எமையும் வந்து ஆள்வாய் அப்பா

துன்ப துயரோ புவியில் அதிகம் அப்பா - முருகா
இயற்கை தந்த அழகோ சிறப்பு அப்பா
நன்மை புரிபவர்கள் நம் நாட்டில் இல்லை - சிலர்
நாள்தோறும் பேசும் பேச்சு பயனுமில்லை.

(துன்ப துயரோ)

என்ன எண்ணி உன்னை வந்து வணங்கிடுவேன் முருகா
எல்லாம் உனது அருளெனவே சரண் புகுந்தேன்
நல்லவர்கள் கூட்டு என்றும்சேர வேண்டும்
நாள்தோறும் துதிபாடிப் பணிய வேண்டும்.

(துன்ப துயரோ)

வல்ல வடிவேல் தினம் கண்டு கண்ணில் தொழவும் வேண்டும்
வரும் காலச் சந்ததிக்கு நல்வழி காட்ட வேண்டும்
கல்லை ஒத்த மனம் கசிய வேண்டும் - உந்தன்
கருணை மழை பொழிந்து எங்கும் பரவ வேண்டும்.

(துன்ப துயரோ)

இல்லை என்ற வாழ்வு இங்கு நீங்க வேண்டும்
இருள் களைந்து ஒளி எங்கும் பரவ வேண்டும்
பண்பு கொண்ட இளைஞர் அணி உருவாக வேண்டும்
பாரில் பக்தி நெறிபரவ வேண்டும் வேல் முருகா.

(துன்ப துயரோ)

-சின்னப்பு தனபாலசிங்கம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடற் புராண வசனம்

(நாற்பத்தொராவது)

விறகு விற்ற படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

வரகுண பாண்டியன் அரசியற்று நாளிலே, வட தேசத்தினின்றும், ஏமநாதன் என்னும் பெயரையுடைய ஒரு யாழ்ப்பாணன், வெகு விருதுகளோடு மதுரையை அடைந்து, அப்பாண்டியன் கோயிலிற் புகுந்து, அவனை வணங்கி, அவன் புகழைக் கொண்டாடி, யாழ் வாசித்தான். பாண்டியன் அவ்விசைத்தேனைத் தன் செவிவாய் மடுத்து, தலையசைத்துப், பீதாம்பரங்களும் இரத்தினாபரணங்களும் கொடுத்து, அவனுக்கு ஒரு வீடமைப்பித்து, அங்கே செல்ல விடுத்துப், போசன பதார்த்தங் களும் அனுப்பினான்.

ஏமநாதன், தனக்குப் பாண்டியன் செய்த வரிசையினாலே மிகக் களிப்புற்றுத், தன்னோடிசைபாடவல்ல யாழ்ப்பாணர்கள் மதுரையில் வேறில்லை என்று செருக்கடைந் தான். பாண்டியன் அதனையறிந்து பாணபத் திரனை அழைப்பித்து, "நீ வடதேசத்தினின்று வந்த யாழ்ப்பாணனோடு இசை பாடுவாயாக" என்றான். பாணபத்திரன் வணங்கி நின்று, "மகாராசாவே! சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளினாலும் உனது கருணையினாலுந் தமியேன் அவனோடு பாடி வென்று, அவனு டைய விருதுகளை வாங்கி, அவன் செருக்கை அடக்குவேன்" என்றான். பாண்டியன், "நாளைக் குப் பாடு; போ" என்றான்.

ஏமநாதன் வீட்டிற்குப் போயிருந்த பின்பு, அவனிடத்தே இசை கற்கும் மாணாக் கர்கள், கடைத்தெருக்களினும், சுவர் வழி களினும், அம்பலங்களினும், மாடங்களினும், வீதிகளினும், இசை பாடிக்கொண்டு திரிந் தார்கள். பாணபத்திரன் அவ்விசையைக் கேட்டு, வியந்து, "ஏமநாதனுடைய மாணாக்கர் கள் பாடும் முறையிது. ஏமநாதன் பாடும் முறை எத்தன்மையதோ! நான் நாளைக்கு இசை பாடி அவனை வெல்வது எப்படி?" என்று நினைந்துகொண்டு, திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே! அடியேனுக்குத் துணை செய் தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

அடியார்க்கெளியராகிய சிவபெருமான், வயசின் முதிர்ந்தினைத்த ஒரு மானுட வடிவங் கொண்டு, அழுக்கு நிறைந்த துணியை உடுத்துக், கொடுவாளை வலப்பக்கத்திலே செருகித், தேய்ந்த செருப்பைப் பாதத்தின் மாட்டிப், பழைய உறையில் இட்ட யாழைத் தோளில் இட்டுக், குடுமி சரியும்படி தலை யிலே சும்மாடு தாங்கி, அதன்மீது விறகு சுமையை வைத்துக்கொண்டு, திருமுகத்திலே வியர்வையரும்ப, வருந்தி நடந்து, ஏமநாதன் இருந்த வீட்டு வாயிலில் வந்தார். அப்பொழுது மாலைக் காலம் வந்தது. சிவபெருமான் விறகு சுமையை இறக்கி, அங்கே ஒரு புறத்தில் ஊன்றிவிட்டு, அவ்வீட்டுப் புறத்திண்ணையில் இருந்து, இளைப்பாறிக்கொண்டு, சிறிதே இசை பாடினார். ஏமநாதன் அதுகேட்டு, "அங்கே இசை பாடுகிறவன் யாவன்?" என்று சொல்லிக்கொண்டு, விறகு சுமையாளர் முன் வந்து, "நீ யார்?" என்றான். விறகு சுமையாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பாணபத்திரருடைய அடிமை. அவரிடத்தே இசை கற்கும் மாணாக்கர்கள் பலர். நானும் அவர்களுள் ஒருவனாய் இசை கற்றுக் கொண்டிருந்தேன். பாணபத்திரர் என்னை நோக்கி, "நீ தசையெல்லாம் ஒடுங்க வயசிலே மிக முதிர்ந்து விட்டாய். இனி நீ இசை கற் பதற்கு வல்லை யல்லை" என்று சொல்லி, என்னைத் தள்ளிவிட்டார். அதனால், விறகு வெட்டி விற்றாயினும் வயிறு வளர்க்கலாம் என்று இத்தொழில் பூண்டேன்" என்றார். ஏம நாதன், "நீ முன் பாடின இராகத்தை இன்னும் ஒருதரம் பாடு" என்றான். விறகு சுமையாளர் யாழை இடத்தோளிலே சாத்திச், சுதி கூட்டி, உடற்றொழிற் குற்றங்களும் பாடற்றொழில் குற்றங்களும் இல்லாவண்ணம், எழுது சித் திரம்போல் இருந்து, யாழோசையும் மிடற் றோசையும் ஒற்றுமைப்பட, இவ்வாறு சாதாரி ராகம் பாடுவாராயினார்:

விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்ன
அரசாய் மதுரை யமர்ந்தான வனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே.

பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா லமர்ந்தா னென்னே.

நீல வண்ணன் றேறா நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே.

விறகு சுமையாள் வடிவங்கொண்ட சிவபெருமான் இங்ஙனம் பாடிய இசைத்தேன், சர்வான்மாக்களுக்குங் காதாகிய கால்வாய் வழியாக ஓடி, உரோமத் துவாரத்தினால் வழியும்படி நிறைந்து, அவர்கள் சரீரத்தை இசை மயமாக்கியது. அவ்விசை கேட்ட பொழுது மரங்களும் அசையவில்லை; கட லும் ஒலிக்கவில்லை; நதிகளும் பாயவில்லை; எல்லாம் சித்திரம் போலாயின. விஞ்சையர்கள் வீணை கை வழுக்கிச் சோர்வாரும், யாழ் ஓசையும் மிடற்றோசையும் வேறாக வேர்ப் பாரும், நாணமும் உவகையும் தள்ள நாக்கு நடுங்கி மனைவியர்மேல் வீழ்வாருமாயினர்கள். சிவபெருமானுடைய தேவகீதம் உலகத்துள்ள இயங்கியற் பொருள் நிலை இயற் பொருள் கள் எல்லாவற்றையும் விழுங்கித், தன்மயமே யாக்கி, ஏமநாதனுடைய உயிரையும் உடம் பையும் உருக்கியது. ஏமநாதன் அவ்விசை வசப்பட்டிருப்பப், பத்திரணடிமையாய் வந்து இசை பாடிய சிவபெருமான் விறகுச் சுமை யோடு மறைந்தருளினார்.

ஏமநாதன், "இது நான் அறிந்த சாதாரி யன்று" இவ்வுலகத்தாருள் ஒருவராயி னும் இதைப் பாட நான் கேட்டிலேன். இது தேவகானம். இதை இவனுக்கு உணர்த்தக் கடவுளேயன்றி மனிதர் வல்லவரா?" இது ஆச்சரியம்! பாணபத்திரனாலே தள்ளப்பட்ட இந்தக் கிழவனுடைய இசை இதுவாயின், அப்பாணபத்திரனுடைய இசை எத்தன்மை யதோ!" என்று நினைந்தான். நினைந்தவுடனே எழுந்து, தன் மாணாக்கர்களுங் குலை குலைய, வஸ்திரப்பெட்டிகளும் ஆபரணப் பெட்டிகளும் யாழும் அங்கங்கே கிடக்க, மானமும் பயமும் முன்னே இழுத்துச் செல் லப், பல்லக்கு ஒருவழியும், குடை ஒருவழியும், பாடன் மகளிர்கள் ஒருவழியும், மாணாக்கர்கள் ஒருவழியும், பாடற்கீழ் மக்கள் ஒருவழியும், வேலைக்காரர்கள் ஒருவழியுஞ் செல்ல, அன்றிரவிற்றானே வடதிசையை நோக்கி, ஓட்டெடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு, சிவபெருமான், பாணபத்திர னுக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நாம் இன்று ஏமநாதனிடத்தே விறகாளாய்ப் போய், நாம் பாணபத்திரனுக்கு அடிமை என்று சொல்லி, இசை பாடி வென்று, உன் வேண்டு கோளை முடித்தோம்" என்று திருவாய் மலர்ந் தருளினார். பாணபத்திரன் விழித்தெழுந்து, அச்சமும் உவகையும் அன்புங் கொண்டு, சூரியன் உதிக்குமுன் போய்ச், சோமசுந்தரக் கடவுளை வணங்கி, அஞ்சலி செய்து நின்று, "எம்பெருமானே! அடியேன் உம்மிடத்து வந்து குரையிரந்தது காட்டுக்குப் போகவா! திரு முடிமேல் விறகு சுமக்கவா! அருமைத் திரு வடி நோவ வந்து அடியேன் பொருட்டு அடாத வார்த்தை சொல்லவா! ஐயையோ! அடியேனி டத்துக் குற்றம் விளைந்ததே! விட்டுணு முத லிய தேவர்களுடைய நெஞ்சத்தையும் வேத சிரசுகளாகிய உபநிடதங்களையும் கடந்த உம்முடைய அருமைத் திருவடிகள் எளியேன் பொருட்டு இப்பூமியைத் தீண்டினவே! உமது பெருமை தமியேனுக்கு எளிதாயிற்றோ! உமது திருவுருவம் நாதாந்தத்தையுங் கடந்த சத்திய ஞானானந்த மயமாமென்பார்கள் பெரி யோர்கள். அது இன்றைக்கு ஒரு மனித வடிவாய் வெய்யிலிலே விறகு சுமந்து பேதை யேனுடைய அன்பளவாயிற்றே! பிரமனாலுங் காணப்படாது மேல் ஏழுலகமுங் கடந்து, அப்பாலுள்ள அண்டங்களுங் கடந்து நின்ற உமது திருமுடி சிறியேன் பொருட்டு விறகு சுமந்ததோ!" என்று இப்படித் துதிசெய்து, வலம் வந்து, வணங்கிக்கொண்டு போய், வரகுண பாண்டியனை வணங்கினான்.

வரகுண பாண்டியன், பாணபத்திர னைக் கண்டவுடனே, "ஏமநாதனை அழைத்து வாருங்கள்" என்று ஏவலாளர்களை விடுப்ப, அவர்கள் போய், ஏமநாதனை அவன் இருந்த வீட்டிற் பார்த்துக் காணாது தேடினார்கள். அதுகண்டு, அயல் வீட்டார்கள் சிலர், அவர் களை நோக்கி, "ஏமநாதன் நேற்றிங்கிருந்தான். ஒரு கிழவன், விறகு சுமந்துகொண்டு, ஏமநாத னிடத்து வந்து, தான் பாணபத்திரனுக்கு அடிமையென்று சொல்லி, இசை பாடினான். ஏமநாதன் அர்த்தராத்திரியில் ஓடிவிட்டான்" என்றார்கள். அதுகேட்ட ஏவலாளர்கள் போய் அவர்கள் சொல்லியபடியே வரகுண பாண்டி யனுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். வரகுண பாண்டியன், வியப்படைந்து, தன்னெதிர் நின்ற பாணபத்திரனை நோக்கி, "ஏமநாதன் ஓடிய வகை என்னை? நீ நேற்று இங்கு நின்றும் போனபின் யாது செய்தாய்?" என்றான். பாண பத்திரன் வணங்கி நின்று, "மகாராசாவே! அடியேன் நேற்று இங்கு நின்றும் போனபின், சோமசுந்தரக் கடவுளை வணங்கிக், குறை இரந்து கொண்டு, வீட்டுக்குப் போய்விட்டேன். சோமசுந்தரக் கடவுள் தமியேனுக்குச் சொப் பனத்திலே தோன்றி, "நாம் உன்பொருட்டு விறகெடுத்துச் சென்று, உன் பகைவனாகிய ஏமநாதனுடைய புறங்கடையை அடைந்து சாதாரி பாடி அவனை வென்று துரத்தி விட்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தமியேன் விழித்து விட்டேன். இதுவே நிகழ்ந்த சமாசாரம்" என்றான். அப்பொழுது வரகுண பாண்டியன் ஏவலாளர்கள் போய் அறிந்து வந்து சொல்லியதும் பாணபத்திரனுடைய கனா நிகழ்ச்சியும் ஒத்தலினால், இது சோம சுந்தரக் கடவுளுடைய திருவிளையாட்டே என்று தெளிந்து, பாணபத்திரனுடைய அன்பையுஞ் சிவபிரானுடைய திருவருளையும் வியந்து, புகழ்ந்து, திருக்கோயிலையடைந்து, சிவபெருமானை வணங்கிக்கொண்டு, பாண பத்திரனை யானைமேலேற்றி, நகர் வலஞ் செய்வித்து, அவனுக்குப் பல வரிசைகளைக் கொடுத்து, அவனை நோக்கி, "தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர்கள் யாவருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்காட்செய்ய இருக்குஞ் சிவபெருமான், தம்முடைய அருமைத் திருவடிகள் நோவ வந்து, உமக்காட்செய்து, உமது குறையை முடித்தருளினாராயின், உமக்கு எல்லாரும் ஏவலாளர்களன்றோ! ஆதலால், நீர் எனக் குடையவர்; நான் உமக்கடியவன். இதுவன்றி, உம்மோடு எனக்கு வேறு வழக்கில்லை; நான் உம்மிடத்தே குறையிரப்பதொன்றுண்டு. இன்று தொட்டுச் சோமசுந்தரக் கடவுளைப் பாடுதலே உமக்குக் கடன்" என்று சொல்லி விடுத்தான். பாணபத்திரன், தனக்கு வரகுண பாண்டியன் தந்த திரவியம் ஆபரணம் வஸ்திரம் முதலியவைகளை வித்துவான்களுக்கும் தன் மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து, வெகுவரிசையோடு தன் பாடற் கீழ்மக்கள் சூழ, வீட்டிற் போய்ச் சேர்ந்து, மகிழ்ச்சியுற்றிருந்தான்.

லட்சுமி கடாட்சத்தை வழங்கும் ரம்பை திருதியை

தேவலோகத்தில் உமையவளுக்குத் தோழிகளாக இருப்பவர்கள் அரம்பையர்கள். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, இவர்கள் கடலுக்குள் இருந்து வெளிப்பட்டதாகப் புராணங்கள் சொல்கின்றன. இவர்கள் தாங்கள் என்றும் இளமை மாறாத கன்னியர்களாகத் திகழவேண்டும்; தங்களுக்கென்று தனி உலகம் வேண்டும் என்று சிவபெருமானை வேண்டினார்கள்.

சிவபெருமானும் அவர்களுக்காக ஓர் உலகத்தைப் படைத்தார். அது "அரம்பையர்கள் லோகம்" எனப்பட்டது. அந்த உலகத்தில் பாற்கடலில் தோன்றிய அறுபதாயிரம் அரம்பையர் பெண்களும் வசித்து வந்தார்கள். அவர்களுக்குத் தலைவியாக இருந்தவள் ரம்பை. அரம்பையர்கள் சிவபூஜையினை மேற்கொள்பவர்களாகத் திகழ்ந்ததுடன் உமையவளுக்குத் தோழியராகவும் இருந்தார்கள். இவர்களில் ரம்பை, அலம்புசை, மனோகரை, ஊர்வசி, கலாநிதி, கனகை, மேனகை, திலோத்தமை, சந்திரலேகை என்பவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள். இவர்களை "அப்சகணம்" என்று அழைப்பார்கள்.

இந்த அழகான அரம்பையர்கள், பலவகையான இசைக் கருவிகளை மீட்டியபடி இனிய குரலில் பாடுவார்கள். ஆடல்கலையில் வல்லவர்கள். பாற்கடலில் தோன்றிய இவர்களை வழிபட்டால் மகிழ்ச்சியும் செல்வமும் இளமைத் தோற்றமும் கிட்டும் என்று புராணங்கள் சொல்கின்றன. ஆனி மாதத் திருதியை இவர்களுக்குரிய நாள் என்றும், கார்த்திகை மாத சுக்லபட்ச திருதியை நாளே இவர்களுக்குரியது என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. இந்நாளில் அரம்பையர்களை வழிபடும் வழக்கம் முற்காலத்திலேயே இருந்துள்ளது. இது, காலம் செல்லச் செல்ல வழிபடும் வழக்கம் மருவி தற்பொழுது, வடநாட்டில் மட்டும் இந்நாளில் லட்சுமி பூஜை செய்து பலன் பெறுகிறார்கள்.

கார்த்திகை மாத வளர்பிறை திருதியை திதி அன்று, ரம்பை திருதியை விரதம் கடைப்பிடித்து, அருகிலுள்ள சிவாலயத்திற்குச் சென்று சிவபெருமானையும் அம்பாளையும் வழிபட்டால், அரம்பையர்கள் மகிழ்ந்து வாழ்த்துவார்கள் என்றும், அழகு குன்றாமலும், இளமைத் தோற்றத்துடனும், லட்சுமி கடாட்சம் நிறைந்தும் வாழ வழி வகுப்பார்கள். கலைத் தொழிலில் ஈடுபாடுள்ளவர்களும் இசை, நடனம், பாடல் பயில்வோரும் இந்நாளில் விரதம் மேற்கொண்டால் கலைஞானம் கிட்டுவதுடன் பெயரும் புகழும் கிட்டும் என்பர்.

திருப்பைஞ்ஞீலி என்ற திருத்தலத்தில் பார்வதி சிவபெருமானை வழிபட வந்தபோது, அரம்பையர்கள் வாழை மரங்களாக மாறி நிழல் தந்து உதவி, அவர்களது அருளைப் பெற்றனர். வாரணாசியில் மேனகையும், திருக்கழுக் குன்றத்தில் திலோத்தமையும் சிவபெருமானை வழிபாடு செய்து அருள் பெற்றனர்.

திருநீலக்குடி, பந்த நல்லூர் போன்ற இடங்களிலும் பல அரம்பையர்கள் வழிபாடு செய்து அருள்பெற்றதாக தல புராணங்கள் குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் விரதி

– முருகவே பரமநாதன் அவர்கள் –

நான்கொண்ட விரதம்நின் அடியலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும்இந்த
நல்விரத மாங்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய்வந்து கவ்வி அந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என் செய்வேன்
தளராமை என்னும் ஒருவகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள் அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என்இருகண் மணியேஎன் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தவம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

-திருவருட்பா திரு அமுதத்திரட்டு
முதல் திருமுறை தெய்வமணிமாலை 11

விரத அனுட்டானம் சைவ நெறியில் மட்டுமன்றி வைணவம், பௌத்தம், இசுலாம், கிறீத்தவம், சமணம் போன்ற சமயிகளாலும் மேற்கொள்ளப்படல் வெளிப்படை. இசுலாமியர் சிறப்பாக (றம்ழான்) நாற்பது தினங்கள் நோன்பு (நோம்பு) பிடிப்பர். பௌத்தர்கள் சில் அனுட்டிப்பர். கிறித்தவர் பல தினங்களை விரதமாகக் கொண்டாலும் ஒரு பருவ காலத்தில் மச்சமாமிசம் இன்றி தூய ஆசார உணவை உண்பர். வைணவர் ஏகாதசி, மார்கழி நோன்பு போல்வன பிடிப்பர். இச் செயற்பாட்டைப் பொதுநோக்கில் உடல் நிலையைச் சமப்படுத்தவும், குடலிற் சமிபாடு பற்றிய ஒழுங்கை நிரைப்படுத்தவும், மனதிலேயோர் ஆத்மீக உணர்வை ஏற்படுத்தவும், நோன்பு வழிவகுக்கலாம். சைவ சமயிகள் ஆண்களும் பெண்களும் குடும்பமாக விரதம் காப்பர். இது ஒரு மனஉறுதியையும், கட்டுப்பாட்டையும் கொண்டுவரும். காந்தியடிகள் இல்லறத்திலும் பிரமச்சரியம் அனுட்டிப்பதன் இன்றியமையாமையை நூலாக்கியுள்ளார். அவர் சத்தியவிரதி, உண்ணா நோன்பு நோற்று நம்மை ஆற்றுப்படுத்தியவர். அரிச்சந்திரன் சத்திய வந்தனாய் வாழ்ந்து காட்டினான். இல்லறமாம் இயலறத்தில் இணைவிழைச்சு முக்கியமானது. ஆசாரக்கோவை, நீதிநெறி விளக்கம் இதை நுட்பமாய் ஆராய்ந்துள்ளது. மாத்திரண்டுவிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரைப்புல்குவது வரையறை செய்யப்பட்டிருக்கிறது. உணவுத் தூய்மை காம உணர்வைக் குறைக்கும். அந்த உணவுக் கட்டுப்பாடும் ஒரு வகை விரதம். குடிபோதையில் நாம் மாற்றமடை கிறோம். எனவே காமாந்தகாரத்தினின்றும் கட்டுப்படவும், எயிட்ஸ் நோயினின்றும் விடுபடவும், இணைவிழைச்சின் செவ்வியை மூர்த்தண்யத்தை விரதத்தால் மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி புனிதம் பெறவும் இந்த விரதானுட்டானங்கள் இன்றியமையாதன.

விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ், சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேசமாக வழிபடுதல் என்று நாவலர் எழுதியுள்ளார். இலங்கணம் பரம ஔஷதம் என்பர். இலங்கணம் பட்டினி கிடத்தல். ஆக விரதத்தை அனுட்டிப்பவர் விரதி. சமயத்தை அனுட்டிப்போர் விரதிகள். குணத்தையுடையவன் குணி. பண்புடையோன் பண்பாளன். அவயவங்களை உடை யவன் அவயவி. நம்மாழ்வர் உறுப்பி- அவயவி எனவும் ஏனைய ஆழ்வார்கள் (பதினொருவர்) இவருக்கு அவயவங்கள் (உறுப்புக்கள்) எனவும் அழைக்கப்பட்டனர். திருக்கேதீஸ்வரத்தில் தங்கி அறப்பணியும், அருட்பணியுமாற்றிய ஸ்ரீமத் சபாரத்தினம் (திருவாசக சுவாமி) சுவாமிகளை விரதியெனப் பாடினார் வித்துவான் ஆறுமுகம்.

அன்புருவன்! என்புருவன்! ஆன்ற திருவாசகத்தேன்
இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் - தென்புதர
வீற்றிருக்கும் யோகிவிரதி சபாரத்தினமாம்
சாற்றரிய சாமிகுருதாள் பணிந்து.

-வண்டு விடுதூது.

வீட்டுமர் சிற்றன்னையின் பிள்ளைகட்காகத்தான் பிரமாச்சாரியம் காத்தார். அதனால் அவருக்குத் தேவவிரதன் என்று பெயர் இளங்கோவடிகளும் இராச்சியத்தைத் துறந்து துறவியான மையும் விரத மாண்மியமே. ஒரு மனவைராக்கியம், மன உறுதி, மனத்திடம், ஒருமைப்பாடு இவ்விரத அனுட்டானங்களால் ஏற்படுகிறது. எனவேதான் விரதமென்றால் வீட்டிலும், கோயிலிலும், மனத்திலும் புனிதம், தூய்மையான சூழல் உருவாகிறது. மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. வாழைஇலை, தாமரைஇலை, கல்லையில் உணவு உண்பதும் ஆரத உணவு சாப்பிடுவதும் நல்வாழ்வியலின் சின்னமாகும்.

ஔவையார் காப்பது விரதம், நேராநோன்பு சீராகாது, நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை எனப் பொன்னெழுத்துக்களிற் பொறித்துள்ளார். கற்றபடி நடப்பது முக்கியம். இந்த விரதம் பலவகைப்படும். தாயுமான சுவாமிகள்

கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே.

-பராபரக்கண்ணி 54.

கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

-பராபரக்கண்ணி 192.

எனப் பாடினார். மனச்சாட்சியைக் கொல்லாமல் இருப்பதே மேலான விரதம். இந்த உபவாசத்தின் உயர்வை வள்ளுவன் வாக்கிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தென வேண்டா வாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

-குறட்பா 942.

சைவ சமயிகள் மேற்கொள்ளும் விரதங்கள் பல வகைப்படும். கந்தசட்டி விரதம் ஆறு நாட்கள் உபவாசம். பிள்ளையார் விரதம் சுமார் 21 நாட்கள். கௌரி நோம்பு 21 தினங்கள். எது எப்படியாயினும் முதல்நாள் நோன்பு ஒரு நேர உணவு. அடுத்த நாள் உபவாசம். மறுநாள் பாரணை. தேவையோடும் விரதம் மேற்கொள்வர். நோய் நீங்க, குழந்தைச் செல்வம் வேண்டி, பெண்களின் கல்யாணம் என விரியும் என்றாலும் சைவத்தில் தினமும் விரத நாளே. 365 நாட்களில் முன்னூற்று அறுபத்தைந்து விரதங்கள் பேசப்படுகிறது. கூடிப்போன மாதிரியே.

உணவோடு தொடர்பான விரதங்களைக் கடந்து திவ்வியமான வாழ்க்கையமைப்புக்கு நல்ல ஒழுக்கங்கள், ஆசாரம், ஒழுங்கு போன்ற வாழ்வியற் தர்மங்கள் ஒவ்வொருவரும் அவற்றை உறுதியோடு கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளல் செவ்விய வாழ்வுக்கு உறுதுணையாகும். பஞ்சமா பாதகங்களின்றும் நாம் விடுபடவேண்டும். மனிதநேயம், சமத்துவம் ஒப்புரவு, கண்ணோட்டம் நாகரிகம் நம்மைவிட்டுப் போக வழிசமைக்கக்கூடாது. சூரன்போர், நரகாசுரன் போர், பசுமாசுரன் போர், மகிடாசுரன் போர், இயம சங்காரம் ஆண்டாண்டாக ஆலயங்களில் தவறாது மேற்கொண்டு என்னபயன்? எம் மனப்போராட்டங்கள் ஓய்ந்தனவா? அமைதி தவழ்கிறதா? சமாதான சகவாழ்வு ஏற்பட்டதா? நான் எனது என்ற முனைப்புகள் மழுங்கினதா? காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்கள் அழிந்தனவா? இவற்றை அகத்தே வைத்து புறத்தே போர்கள் நடத்தியென்ன பயன். எம் மனதிலே இருக்கும் அசுரர்களை வெளியகற்றி பசுமையாக மனதை மாற்றியமைப்போம். பாரதி கூறியதை உளங்கொள்வோம்.

கலகத்தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்து விட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
பலகற்றும் பல கேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரியம்மா
பய னொன்றுமில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

-உலகத்து நாயகியே 1.

இரத்தத்திலே நோயேற்படும்போது டாக்டர்கள் அதை வெளியேற்றிச் சுத்திகரித்து ஏற்றுவதுபோல (கிட்னிக்கு - டயலிசிஸ்ற் செய்வதுபோல) எங்கள் துர்க்குணங்களை நீக்கி நற்குணங்களை வளர்ப்போமாக. இதுவே மகா விரதமாகும். நாமும் நம் சமூகமும் சிறக்க ஒவ்வொருவரும் பாடுபடுவோமாக. விரதம் பட்டினி இருப்பதன்று. உயர்ந்த பக்குவங்களை வளர்த்து மனதைக் கெட்டியாக்கி சிறந்த மானுடத்தை உருவாக்குவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என்
இதயம் ஒடுங்க வில்லை
யான் எனும் அகந்தைதான் எள் அளவும் மாறலை
யாதினும் அபிமானம் என்
சித்தமிசை குடி கொண்டது, ஈகையொடு இரக்கம் என்
ஜென்மத்தும் நான் அறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவில் ஆயினும்
தரிசனம் கண்டும் அறியேன்
பொய்த்த மொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன், பிறர் கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை உண்டோ சொல்லாய்
அண்ட பகிரண்டமும் அடங்க ஒருநிறைவு ஆகி
ஆனந்தம் ஆன பரமே.

-தாயுமானவர்.

இல்லற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த ஒருவர் விரக்தியினால் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் துறவு வாழ்க்கைக்குப் போய்விடலாமா என்று சிந்தித்தார். ஆனால் ஒன்றுமே புரியவில்லை. சரி ஒரு மகானிடம் இதுபற்றிக் கேட்கலாமென்று ரமண மகரிஷியைச் சந்திக்கச் சென்றார். அங்கு போய்ச் சேர்ந்தபோது இலைகளை ஈர்க்குக் குச்சியால் தைத்து "தையல் இலை" தயாரித்துக் கொண்டிருந்தார் மகரிஷி. பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று போனவர் யோசித்துக் கொண்டிருக்க ரமணரே பேச ஆரம்பித்தார். இதோ பார், "கஷ்டப்பட்டு இந்த தையல் இலையைச் செய்கிறோம். செய்த இலையை இப்படியே எறியமுடியாது. அதனோட வேலை முடிஞ்ச பிறகுதான் இதைத் தூக்கி எறிவோம்" என்றார். இதைக் கேட்டதும் குழப்பத்துடன் வந்தவருக்கு ஒரு தெளிவு கிடைத்தது. வேறெதுவும் கேட்காமல் வீடு திரும்பிவிட்டார். திரும்பியவர் யோசித்தார்.... உண்மைதான் எமது வாழ்க்கையும் மகரிஷி உவமானம் காட்டிய தையல் இலைதான். நமக்கென்று சில வேலைகள் இருக்கின்றன. அதற்காகவே நாம் இறைவனால் படைக்கப் பட்டிருக்கிறோம். அவற்றை முடிக்காமல் துயரங்களுக்குப் பயந்து வாழ்க்கையை விட்டு ஓடிப்போய்விட முடியாது. அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்ய வழிகாட்டுவதே ஆன்மிகம். எனவே அதை "முதலில் பார்ப்போம்" என்று சிந்தித்து அன்றிலிருந்து இல்லறக் கடமைகளைச் சரியாகச் செய்ய ஆரம்பித்தார்.

இல்லறத்தில் இருங்கள், துறவியாக வாழுங்கள்.

-கண்ணதாசன்-

தோல்வியடைந்த பிறகும் இன்னும் ஒரு தடவை முயற்சி செய்வதே வெற்றிக்கான வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழித்துணை 51

–ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்–

01 ஐம்பூதம் ஐந்துமே இறைவனாய் இருப்பதால்
அ.ிணை அனைத்துமே மதித்ததை உயர்ந்திட
உயர்திணை மனிதனோ உணராமல் மிதித்ததை
மீண்டும் மீண்டும் அ.ிணை ஆகிறான்.

02 புற்றுக்குள் கறையானில் புதிரொன்றும் கிடையாது
அது செட்டைகட்டிப் பறத்தலே ஆபத்தில் முடிதல்போல்
செல்வத்தைச் சேர்ப்பதிலும் தவறொன்றும் கிடையாது
அது செருக்காக மாறுதலே ஆபத்தில் முடியும்.

03 சில்வண்டு கத்துவதும் அதற்கேதோ இன்பம்தான்
சக்திக்கு அப்பாலது கத்தியே அழிதல்போல்
வையத்தில் வாழ்வோற்கு வசதிகளும் இன்பம்தான்
வரட்டுக் கௌரவமாய் அதுமாறுதலே அழிவாகும்.

04 மாரியிலே தவளைகளும் கத்துவது மகிழ்ச்சியால்தான்
கத்துதலே அதற்கழிவாய் இறுதியிலே முடிதல்போல்
மகிழ்ச்சியிலே திளைத்திடுதல் மானிடற்கும் சகஜம்தாம்
அது மமதையாக மாறுதலே துன்பத்தில் முடியுமாம்.

05 தாய் அணைப்பில் குஞ்சுகளும் வாழ்வதுதான் வாழ்வாகும்
அவை தனித்துஇரை தேடவென எண்ணியே அழிவதுபோல்
பெற்றோரின் சொற்கேட்டல் பிள்ளைகட்கு வாழ்வாகும்
அது புறக்குடத்து நீராதல் பிள்ளைகட்கே அழிவாகும்.

06 நெடுங்கடலில் மீனோடி வசித்திடுதல் வாழ்வாகும்
அது மின்னலென விண்பறக்க எண்ணியே அழிதல்போல்
வையகத்தோர் இயற்கையுடன் ஒன்றிவாழ்தல் வாழ்வாகும்
அதையும்நாம் விஞ்சுகிறோம் என்பதுவே அழிவாகும்.

வெற்றி நிச்சயம் என்ற மன உறுதியே வெற்றிக்கு ஆதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கடல்நின்றோர் சிறுநண்டு தரைபார்த்தல் தவறன்று
அது தனைமறந்தே சிலநேரம் தரையேறி அழிவதுபோல்
கரைநின்றோர் மனிதமனம் கடல்பார்த்தல் தவறன்று
அதுகரைமீறிச் சிலநேரம் கடல்குதித்தல் அழிவாகும்.

08 சோலைக் குயிலதற்குச் சொக்கவைக்கும் குரலிருந்தும்
காகத்தின் கூட்டிலது கூவியே அழிதல்போல்
வாலைப் பருவமதில் வளமான துடிப்பிருந்தும்
அவர் காலத்திற்கொவ்வாத சில ஆற்றுதலே அழிவாகும்.

09 சிறுநூலில் ஏறும்வரை உயரவேதான் பட்டமேறும்
அது பெருநூலாய் மாறுதலே இறங்கவழி வகுத்தல்போல்
சிறுதினைப் பெரிதாக மதித்திடலே உயர்வுதரும்
உயர்விருந்தும் திருப்தியின்றேல் அதுவேதான் தாழ்வுதரும்.

10 அகத்தழகு கொண்டகாகம் அவனியெலாம் பவனிவர
முகத்தழகு கொண்டசிட்டு முட்கூட்டில் அழிவதுபோல்
அகத்தழகாம் அறிவழகை அவனிதனில் ஏற்றிடாமல்
முகத்தழகை மட்டுமிங்கே அழகெனலே அழிவாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னதானத்திற்கும்
மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்
பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்
கீழே உள்ள முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

காசோலை
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

Swift code - BCEYLKLX 028 - 7342444

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஐந்தெழுத்தின் அருட்சிறப்பு

–திரு பு. கதிரித்தம்பி அவர்கள்–

உயிரினங்கள் வினைகளை அனுபவிப்பதற்கே இறைவன் உலகினைப் படைத்தான். பல்லுயிராய்ப் பார்தோறும் வாழ்கின்ற உயிரினங்களுக்கு பஞ்சபூதங்களையும் படைத்து உயிர்கள் உண்பதற்கேற்ற, உணவுகளையும் படைத்துள்ளான். இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களில் அரிய பிறவியை மானுடர்களுக்கு அளித்துள்ளான். மானுடர்களினாற்றான் பூமியை ஆளமுடியும் என்ற உண்மையை உணர்ந்து மானுடர்களுக்கு ஆறறிவையும் கொடுத் துள்ளான். எனவே மானுடர்கள் தினமும் ஆலயம் சென்று இறைபணி செய்து, நாவில் "நமச்சிவாய" என்னும் மந்திரத்தை இருத்தி இறைவன் புகழைப் பாடவேண்டும். நா நமச்சிவாய என்னும் திருநாமத்தை ஓத வினைகள் அகன்றுவிடும். முத்தியை அடையும் வழியையும் கண்டு கொள்வான். உள்ளத்தில் இறை சிந்தனையே குடிகொள்ளும். நா எந்நேரமும் நமச்சி வாய என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டிருக்கும். எங்கும் சிவம் என்ற பேருணர்வு உள்ளத்தை நிறைத்துவிடும். எங்கும் சிவமே காண்பான்.

திருஐந்தெழுத்தின் அருட்சிறப்பை நன்கு உணர்ந்தவர்கள் நாயன்மார்கள். மூன்று வயதில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு "தோடுடைய செவியன்" என்னும் முதலடியையுடைய பாடலைப் பாடி, ஞானப்பால் கொடுத்த அப்பன் அம்மையை தந்தைக்கு எடுத்து அருளியவன். திருஞான சம்பந்தர். திருஐந்தெழுத்தின் சிறப்பை

துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள் தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்சவு தைத்தன அஞ் செழுத்துமே.

எனப் பாடி, காலனையும் காலால் உதைத்தது திருவைந்தெழுத்து என்று இயம்புகிறார். திருநாவுக்கரசரை சமணர்கள் சுண்ணாம்பறையில் ஏழு நாட்கள் நீர் உணவின்றி அடைத்தும், நஞ்சு கலந்த சோற்றை உண்ணக்கொடுத்தும் இறவாதிருப்பதைக் கண்டு, மதங்கொண்ட யானையை ஏவிவிட்டார்கள். யானை, பாகனை கீழே வீழ்த்தி உதைத்துக் கொன்று, நாவுக்கரசரை வலம் வந்தது. இதைப் பார்த்த சமணர்கள் அரசனிடம் ஓடிச்சென்று எங்களிடம் கற்ற மந்திரத்தால் நாவுக்கரசன் யானையை எங்களைக் கொல்ல ஏவிவிட்டான் என்று முறையிட்டனர். இவனை உயிரோடு விட்டால் எங்கள் சமயமும், நாமும் இறந்து விடுவோம், கல்லோடு கட்டிக் கடலில் ஆழ்த்துவதுதான் வழியெனக்கூறி, அரசன் அனுமதியுடன் கடலில் போட கல் தெப்பமாக மாறி பாதிரிப்புலியூர் கடற்கரையை அடைந்தது. நாவுக்கரசர் நமச்சிவாய என்னும் நாமத்தை ஓதியதனால் அருட்சக்தி பெறப்பட்டு, உயிரோடு வாழ்ந்தார் என்ற உண்மையை அறியக்கிடக்கின்றது. இன்னும் அப்பர் மாந்தரைப் பார்த்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு நாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒரு காலும் திருக்கோவில் சூழாராகில்
உண்பதன் முன் மலர்பறித் திட்டுண்ணாராகில்
அரு நோய்கள் கெட வெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னில்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

இப்பாடல் மூலம் இறைபணி செய்யாது பிறந்து வீணே இறக்கின்றனர் என வருந்துகின்றார்.

"வேத நான்கினு மெய் பொருளாவது நாதன் நாம நமச்சிவாயவே என்று திருஞான சம்பந்தர் கூறியதற்கு இணங்க சுந்தரர்,

மற்றுபற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத் துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

என்னும் பாடல்மூலம் தான் மறந்தாலும் நா நமச்சிவாயவே என்று சொல்வதாக அருளுகின்றார். இதுபோல் மணிவாசகரும் திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப் பட்டு, இறைவனுக்கு பாதபூசை செய்யும்போது "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்னும் திரு ஐந்தெழுத்தை முதலாகக் கொண்டு "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்று சிவபுராணத்தைப் பாடி முடிக்கின்றார். இதனால் நமச்சிவாய என்னும் மந்திரத்தின் அருட்சிறப்பு ஓங்கி ஒலித்து நிற்கின்றது. இனி திருமூலர் திருநாமம் ஐந்தெழுத்தை கூறும்

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவது
நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம்
தின்று கண்டோர்க்கு இது தித்தித்தவாறே.

எனும் பாடல்மூலம் திருவைந்தெழுத்தின் அருட்சிறப்பை மக்களுக்கு அறிய வைக்கின்றார்.

நாயன்மார்களும், யோகிகளும், சித்தர்களும், அடியார்களும் தினமும் ஆலயம் சென்று, திருப்பணி செய்து, திரு ஐந்தெழுத்தை நா உச்சரிக்க வீதிவலம் வந்து, இறைவனை மனமார வாழ்த்தி வீழ்ந்து வணங்கி அவன் பிரசாதம், விபூதி வாங்கி நெற்றியிலும் மார்பிலும் பூசி வணங்குதல் வேண்டும். திருவைந்தெழுத்தை உள்ளத்தில் இருத்தி, இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! என வாழ்த்தி வீடு செல்லுதல் நன்று.

கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஓம் என்னும் மந்திரத்தைக் கொண்ட அருள் முருகனாகவும் திருவைந்தெழுத்தைக் கொண்ட முருகனாகவும் விளங்குகின்றான். தற்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுக்கு விழா நடைபெறுகின்றது. அடியார் கூட்டம் விழாக்காண ஆசாரசீலர்களாக விரதம் அனுட்டித்து வழிபடுகின்றனர். செல்வச்சந்நிதியான் திருவிழாக் காலங்களில், அடியவர்கள் காவடியுடன் முருகனும் ஆடுவதாக அடியவர்கள் கூறுகின்றனர். அன்னக் கந்தன் என்னும் நாமம் பெற்ற செல்வச்சந்நிதியான் வரும் அடியார்களுக்கு அன்னம் பாலிக்க சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சுட்டிக்காட்டுகின்றான். வேறு அன்னசத்திரங்களும் அடியார்களுக்கு அன்னம் பாலித்துக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே செல்வச்சந்நிதியானை வழிபடச் செல்லும் அடியார்கள் திருஐந்தெழுத்தை மனதில் இருத்தி, நாவால் ஓதிக்கொண்டு வீதிவலம் வந்தால் வினைகள் ஒழிந்து பேரின்ப வாழ்வாகிய இறைவன் பாதம் அடையலாம் என்பது உண்மை. செல்வச்சந்நிதியானை வழிபடுவதினால் எந்நிதியும் தருபவன் நிம்மதியையும் தந்து வாழ வைப்பானென்பது திண்ணம்.

உழைப்பு

உலகம் உன்னை மதிக்க வேண்டும் என்றால் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். உழைப்பவனையே உச்சியில் வைத்து ஆடும் இந்த உலகம். தொடர்ந்து கடினமாக உழைத்தால் குறிக்கோளை அடைய முடியும். உழைப்பு பிழைப்புக்கு மட்டும் வழியல்ல. உலகில் நீ நிலைத்து நிற்கவும் அதுதான் வழி. உழைப்பை நீ மதித்தால் அது உன்னை மதிக்கும். நீ வாழ்க்கையில் உயர அது வழிவகுக்கும். உழைக்க நான் தயார், ஆனால் வாய்ப்பு இல்லையே, வழி தெரியவில்லையே என புலம்பித் தவிக்காதே. வான் உள்ளளவும் உழைக்கும் வாய்ப்பு உள்ளது. காரணம், மக்கள் பெருக்கம்.

உழைத்துத்தான் வழியைத் தேட வேண்டும். அது உன்னைத் தேடி வராது. உழைப்பவர்கள் மட்டுமே உலக வரலாற்றில் இடம்பெற முடியும். உழைக்காதவர்கள் உலக வரலாற்றை உற்றுப் பார்க்கக்கூட முடியாது. உழைக்காதவர்களை உலகம் உதறித் தள்ளிவிடும். உற்ற மனைவிகூட வெறுத்துவிடுவாள். தண்டச்சோறு, உதவாக்கரை என உலகம் எள்ளி நகையாடும். உடன்பிறப்புக்கள் உழைக்காதவர்களை புறக்கணிப்பார்கள். நண்பர்கள் வெறுத்து ஒதுக்குவார்கள். உழைக்காதவர்களுக்கு உற்ற நண்பர்கள் இருக்கமாட்டார்கள். உழைக்காத கும்பல் நாளடைவில் கலைந்துவிடும். உழைப்பால் உயர்ந்தவர்களை உலகம் இனங்கண்டுகொள்ளும். பாராட்டும். புகழும். உழைப்பவர்கள் உலக வரலாற்றில் நிலையான இடம்பெறுவார்கள்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த காக்ஸ்டன், அச்சகம் அமைத்து அரும்பெரும் சாதனை படைத்தவர். ஆரம்ப காலத்தில் அவர் சந்தித்த இன்னல்கள் ஏராளம். இன்று "காக்ஸ்டன்" பெயர் உலக வரலாற்றில் நிலைத்து நிற்கக் காரணம் எது? உழைப்பு தொடர் உழைப்பு! ரெயில் எந்திரத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய ஜார்ஜ் ஸ்டீபன்சன் உலகப் போக்குவரத்து வரலாற்றில் நிலைத்த பெயர் பெற்றது எப்படி? அவரின் உழைப்பேயன்றி வேறு யாது? தொலைநோக்கி, வெப்பமானி, திசைகாட்டும் கருவி, நிலத்தடி நீர் அறியும் கருவி ஆகியவற்றை கண்டுபிடித்து உலக சாதனை பெற்ற கலிலியோ, உலக வரலாற்றில் இடம்பெற்றது எதனால்? உழைப்பினால் மட்டுமே.

மெதுவாக நடக்கும் தோல்வியை வேகமாக ஓடிப் பிடிக்கிறது சோம்பல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

மனிதனுடைய ஆடம்பர வாழ்க்கை எப்படி முடிகிறது என்பதை உள்ளத்தில் தைக்கும்படி கூறுகிறார் திருமூலர். வாழ்வு நிலையற்றது எனவே இப்பொழுதே இக்கணமே இறைவனிடத்தில் உள்ளத்தை செலுத்துங்கள் என்பதை உணர்த்துவதற்காக "யாக்கை நிலையாமை"யைப் பல வழிகளிலும் எடுத்தியம்புகிறார்.

மனித சமூகத்தில் சிறப்புகள் பெற்ற மகனை "நம்பி" என்று சொல்லுவது மரபு. முனிவரும் அப்படிப்பட்ட ஒரு நம்பியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுகிறார்.

"மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது"

(மன்றம்- பல தெருக்கள் சேர்கின்ற சிறந்த இடம். அப்படிப்பட்ட உயர்வான இடத்தைச் சம்பாதித்து; நம்பி- இந்தத் தலைமகன்; மாடம் எடுத்தது- மாளிகை கட்டினான். தனது தொழிலை கருதி "எடுத்தது" என்று அ.றிணையில் முடிகிறது வினைமுற்று)

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற்று ஏறினான்

(மன்றத்தே- பலர் அறியும் படியாகவே பொது இடங்களிளெல்லாம் சிவிகை பெற்று ஏறினான்- பல்லக்கில் ஏறிச் சென்றான்)

மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்

மேலும் நம்முடைய நம்பியானவன் செல்வம் மிகுந்து பொது மக்களுக்கு ஆடம்பரத்தோடு மூன்று கோடி நன்கொடை பொன் வழங்கினான். இப்படியெல்லாம் ஊரார் அறியும்படி செயல்கள் புரிந்த நம்பி.

சென்று, "அத்தா" என்ன, திரிந்திலன்தானே"

(சென்று "அத்தா" என்ன - சென்று அத்தா என்ன சென்று போயொழிந்து; அத்தா என்ன- அப்பா அப்பா என கூவிக் கதறி அழைத்தும் திரிந்திலன். தானே இறந்தொழிந்தான்)

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற்று ஏறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று "அத்தா" என்ன, திரிந்திலன் தானே.

இந்த உடம்புக்குள் தொண்ணூற்றாறு தத்துவங்கள் இருந்து செயல் புரிகின்றன என்று ஞானிகள் கூறியிருக்கிறார்கள். இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களும் உடம்பில் உயிர் இருக்கும்வரைதான் தொழிற்படும். உயிர் நீங்கியதும் இந்த தத்துவங்களும் வேலை செய்யாது நின்றுவிடும். அதாவது இந்த தொண்ணூற்றாறும் வேலை சரியாக செய்வதே உயிரின் இயக்கமாகும். இதைப்பற்றி கூறுகிறார் திருமூலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்

(செப்ப மதிகளுடைய கோயில்- அழகான சுவர் கட்டிய ஓர் அரசமாளிகை இந்த அரண்மனையுள்ளே தொண்ணூற்றாறு ஏவலாளர்கள் பணி செய்கிறார்கள். முப்பது முப்பது முப்பத்தாறு என்பது தொண்ணூற்றாறு தத்துவங்கள்)

யோக முறைப்படி இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களும் 30,30,36 என்று மூன்று நிலைகளாக இயங்குகின்றன. பேசுதல், கேட்டல், உணவை உட்கொள்ளல், ஜீரணித்தல் முதலிய பல தொழில்கள் இந்த உடம்புக்குள்ளே நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றையே தொண்ணூற்றாறு தத்துவங்கள் என ஞானிகள் கூறுவர்.

செப்பம் மதிள் உடைக் கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தார்களே.

(சிதைந்தபின் - உயிர் நீங்கி இந்த உடல் விழுந்ததும், ஒப்ப அனைவரும்- இந்த தொண்ணூற்றாறு பேரும் சேர்ந்து ஒன்றாகவே ஓட்டெடுத்தார்களே- அரசன் இறந்ததும் அவனுடைய ஏவலாளர்கள் ஓடிவிடுவது போல் ஓட்டம் எடுத்தார்கள்)

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவரும்
செப்ப மதிகளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்பம் மதிளுடைக் கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.

உடலில் உயிர் இருக்கும் வரை தொண்ணூற்றாறு பேர் இதனுள் பரிபாலனம் செய்கிறார்கள். உடல் சிதைந்ததும் அத்தனை பேரும் ஓடி விடுகின்றார்கள். எனவே இவ்வுடம்பு திடமாக இருக்கும்போதே இதனுள் மெய்ப்பொருளைக் கண்டு உய்ய வேண்டும் என்பதே தவயோகியின் அறிவுரையாகும். (தொடரும்...

அன்பு

துறவி ஒருவர் தனக்குத் தேவையான பொருட்களைத் தூக்கிக்கொண்டு மலை உச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருந்தார். செங்குத்தான மலை. எனவே, மேலே ஏற ஏற கனம் அதிகமாகி மூச்சு வாங்கத் துவங்கியது அவருக்கு.

சற்று தூரம் இன்னும் முன்னால் போனதும், அங்கே ஒரு மலைவாழ் சிறுமி தனது மூன்று வயதுத் தம்பியைத் தூக்கிக்கொண்டு, உற்சாகமாய் பாடல் ஒன்றையும் பாடிக்கொண்டு மிகச் சாதாரணமாக மலை உச்சி நோக்கிப் போவதைப் பார்த்தார். துறவிக்கோ ஆச்சரியம்! அவர் சிறுமியைப் பார்த்துக் கேட்டார் "என்னம்மா... இவ்வளவு சிறிய பையைத் தூக்கிக்கொண்டே மலை ஏற என்னால் முடியவில்லை. உன்னால் எப்படியம்மா இவ்வளவு பெரியவனைத் தூக்கிக்கொண்டு ஏற முடிகிறது?"

அதற்கு அந்தச் சிறுமி சொன்ன பதில், "ஐயா.... நீங்கள் தூக்கிக்கொண்டிருப்பது ஒரு சுமையை. ஆனால் நான் தூக்கிக்கொண்டிருப்பதோ என் தம்பியை!"

துறவிக்குப் புரிந்தது. அன்பு எதையும் சுமக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைத் தீப தத்துவம்

–திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள்–

ஆண்டுதோறும் ஆலயங்களிலும், வீடுகளிலும் கார்த்திகை மாதத்தில் தீப தரிசனத்தை விழாவாகக் கொண்டாடுகின்றார்கள். தீபம் ஏற்றுவதால் இருள் நீங்கும். இது அனைவரும் அறிந்த விடயமாகும். அது ஆன்மீக எண்ணங்களுக்கு புதிய பொலிவைத் தருகின்றது.

ஒளி வழிபாடு என்பது உலக சமய வரலாற்றில் மிகவும் புராதனமானது, இந்து மதத்தில் தத்துவம், புராணம், சடங்கு என்ற மூன்று ஆதாரங்களில் தத்துவம் மிகவும் முக்கியமானது.

தீப வழிபாடு நம் வாழ்வில் மங்கலகரமாகக் கருதப்படுகின்றது. மனித வாழ்வில் அறிவையும் ஆன்ம உணர்வையும் மறைந்திருக்கிற இருளை, ஒளி ஏற்றி வெற்றி பெறுவதையே சமய கலாசாரம் வலியுறுத்துகின்றது. இதன் பிரதிபலிப்பே தீப வழிபாடாகும்.

ஒளியை, அதாவது நெருப்பை உருவாக்கத் தெரிந்துகொண்டபோதுதான் மனிதன் பண்பாட்டுப் பாதையில் முதல் அடியை எடுத்து வைத்தான். நெருப்புச் சூட்டில் தன் உணவையும், ஒளியில் தன்னையும் பக்குவப்படுத்திக் கொண்டான்.

ஒளி நல்லவற்றின் குறியீடு
இருள் தீயவற்றின் குறியீடு

புற இருளை விளக்கொளி போக்குவதைப்போல, அக இருளை நீக்க அறிவு ஒளியைப் பயன்படுத்த வேண்டும். விளக்கொளி எவ்வாறு பாகுபாடு இன்றி எல்லோரையும், எல்லாவற்றையும் தழுவுகின்றதோ, அப்படியே நம் அக ஒளியான அன்பு ஒளி எல்லோரையும், எல்லாவற்றையும் வேறுபாடு இன்றி அரவணைப்பதாக அமைய வேண்டும்.

நமது அக ஒளியின் புற வெளிப்பாடாகத்தான் தீபத் திருவிழா கொண்டாடப்படுகின்றது. ஒளி, உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. ஆதலால் அவ்வொளியைக் கொடுக்கும் கதிரவனைக் கடவுளாகவே நம் முன்னோர்கள் போற்றி வழிபட்டனர்.

தேவார திருவாசகங்களிலும் ஒளி வழிபாட்டைப் போற்றுகின்றனர். திருஞான சம்பந்தர் தனது இரண்டாம் திருமுறையில், திருமயிலாப்பூரில் பூம்பாவையை உயிர் எழுப்பிய திருப் பதிகத்தில்,

"கார்த்திகை தளத்தேந் தின முலையார்
தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று பாடுகின்றார். இதன்மூலம் அந்தக் காலத்திலேயே கார்த்திகை மாதத்தில் எங்கும் ஏராளமான விளக்குகள் ஏற்றி இறைவனை வழிபட்டார்கள் என்பதை அறிகின்றோம்.

திருவண்ணாமலை தீபத்தைக் குன்றின் மேலிட்ட விளக்கு என்கின்றோம். மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் அருளிய "அருள்பத்து" என்னும் முதல் பதிகத்தில் இறைவனை,

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பணைமுலை மடந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியே பரனே பால் கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா"

என்று பாடியுள்ளார்.

திருமந்திரம் செய்த திருமூலரும் இறைவனைப் பேரொளி என்னும் விளக்கென்று கூறுகின்றார்.

அறியாமை, வறுமை, வன்முறை என்னும் காரிருளை அகற்ற அறிவு, வளமை, ஒற்றுமை என்னும் தீபங்களை ஏற்றுவோம். இதுவே நாம் மனித குலத்துக்கு மட்டுமன்றி இறைவனுக்கும் செய்யும் மாபெரும் தொண்டாகும்.

புறம் பேசாதீர்கள்

ஒரு மனிதனைப் புறம்பேசத் தூண்டும் முதற்காரணம் ஒருவன்மீது மற்றவர்களுக்கு ஏற்படும் காழ்ப்புணர்ச்சி. இதன்போது பின்னவன் முன்னவனின் இழி நிலைகளை எடுத்துக் கூறுவதன்மூலம் திருப்தி அடைகிறான். இதனால் அவன் மனதில் பொங்கிக் கொண்டிருந்த சினம் சிறிதளவேனும் அமைதி அடைகிறது.

எனவே சினமும், பொறாமையும் ஒரு மனிதனைப் புறம் பேச வைக்கும் காரணங்களில் வன்மை வாய்ந்தவை முக்கியமானவை.

நான்கு பேர் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு அரட்டை அடிக்கும்போதும், புறம் பேசும்போதும் அவர்களில் ஒருவனுக்கு அவன் நல்லவனாக இருந்தால் வேதனை ஏற்படுவது உண்டு. ஆனால் என்ன செய்ய முடியும்? கூட்டத்திலிருந்து வெளியேறிவிட முடியாது. ஏனெனில் அது பண்புக்கும் நட்புக்கும் முரணானது என்பது அவன் கருத்து. நான்கு பேர் ஒன்று சேர்ந்து உரையாடக் கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவன் விருட்டென்று எழுந்து போவதை நாகரிகமற்ற செயல் என்கிறார்கள். எனவே உங்கள்மீது அபாண்டமான பழியொன்றைப் போட நினைக்கின்றான் உங்கள் விரோதி. எனவே தற்காப்பு எண்ணத்துடன் அந்தப் பழியை நீங்கள் அவன்மீதே சுமத்தி விடுகிறீர்கள்.

மற்றவர்களைக் குறைத்துப் பேசுவதன்மூலம் தம் மதிப்பை உயர்த்திக்கொள்ளும் எண்ணம் சிலருக்கு உண்டு. சில நேரங்களில் இந்த எண்ணமே ஒரு மனிதனைப் புறம் பேசவைத்து விடுகிறது.

இந்த தரத்தைச் சேர்ந்தவர்கள், உரையாடுவதில் திறமை பெற்றிருப்பார்கள். "சே! என்ன மனிதன் அவன்! அவனுடைய பகுத்தறிவு மங்கிப்போய்விட்டது. அவன் சிந்தனை நல்ல முறையில் வேலை செய்வதில்லை" என்று அவன் முதுகுக்குப் பின்னால் பேசத் தொடங்குவார்கள்.

ஒருவர் குறித்து உங்களுக்கு ஏற்பட்டு இருக்கும் பொறாமை உணர்வு உங்களைப் புறம் பேசத் தூண்டுகிறது. இதை முதலில் நான் குறிப்பிட்டு விட்டேன் என்றாலும் இதில் சிறிதளவு வேற்றுமையுண்டு. உங்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புண்டு. உங்களை எப்போதும் மக்கள் பாராட்டுகிறார்கள். உங்கள் அறிவும் திறமையும் மற்றவர்களைக் கவர்ந்திருக்கின்றன. இந்த நிலையைப் பார்த்து உங்கள் விரோதி வேதனைப்படுகின்றான். சமூகத்தில் உங்களுக்கு இருக்கும் கண்ணியமும் சிறப்பும் அழிந்துபோக வேண்டும் என்று அவன் ஆசைப்படுகின்றான்.

ஆனால் அவனால் இந்த வேலையை எளிதில் செய்யமுடியாது. எடுத்த எடுப்பில் ஒருவன்மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபிமானத்தைக் கிழித்தெறிய முடியாது. எனவே சில வேளைகளில் அவன் உங்கள் நண்பனாக இருக்கலாம். அப்படி நண்பனாக இருந்தும் அவன் உங்களைப் பற்றி புறம் பேசினால் உடனே அவனை நண்பர்கள் பட்டியலில் இருந்து விடுதலை அழித்துவிடுங்கள். தம்பி தங்கைகளே நீங்களும் யார்மீதும் பொறாமையோ காழ்ப்புணர்ச்சியோ கொள்ளாதீர்கள். யார்பற்றியும் புறம் பேசாதீர்கள். யாரையும் வேதனைப்படுத்தாதீர்கள். அது நல்ல பண்பல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணப் பந்தலிலே...

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இறைவனின் திருவிளையாடல்கள் அனைத்தும் ஈசன் யாரோடு விளையாடுகின் றார்? எல்லாம் தன்னை இமைப்பொழுதும் மறவாத தனது மெய்யடியார்களோடுதான். அவரது விளையாட்டுக்களைத்தான் சற்றுப் பார்ப்போமே!

மணிவாசகருக்காக நரிகளைப் பரிகள் ஆக்கினார் எம்பெருமான். வந்தி அம்மைக்காக பெண் சுமந்த மேனியன் மண் சுமந்தார், பிரம்படியும் பெற்றார்.

இவை மாத்திரமல்ல, தாய்ப் பன்றியை இழந்த பன்றிக் குட்டிகளுக்காக பன்றி வடி வெடுத்துப் பால் கொடுத்ததும் ஈசன்தான். திண்ணனாரின் பக்தியின் மேன்மையை சிவ கோசரியாருக்கு வெளிப்படுத்த தன் கண்ணில் இருந்து குருதி வடியச் செய்ததும் காளத்தி அப்பரான ஈசன்தான். உடல் சலித்தும் மனம் சலியாத அப்பர் சுவாமிகளுக்கு அவர் தன் உடல் தேயக் கையிலையைக் காண்பேன் என பிடிவாதத்துடன் கையிலை நோக்கி சிரமத் துடன் பயணிக்கையில் அவர்மேல் கருணை கொண்டு, கையிலைக் காட்சியைத் திருவை ஆற்றிலே காட்டி அப்பர் சுவாமிகளை வியப் பும், களிப்பும் அடையச் செய்தவரும் ஈசன் தான்.

இத்தகைய திருவிளையாடல்களை விந்தையாகப் புரிந்த எம்பெருமான், தனது தோழனான தம்பிரான் தோழராம் சுந்தரர் வாழ் வில் புரிந்த திருவிளையாடலைச் சற்று நோக்கு வோம்.

இதற்கு யாம் மானசீகமாக திருக் கையிலை சென்றாக வேண்டும்.

ஆலால சுந்தரர் திருக்கையிலையிலே சிவபிரானுக்கு மலர் கொய்து பூமாலை கட்டி பணிவிடை செய்து வந்தவர், அதே நேரம், நந்தவனத்திலே உமையம்மைக்கு, மலர் கொய்து பணிவிடை செய்த உமையின் சேடி யரான அநிந்திதை, கமலினி ஆகிய இரு பெண்கள்பால் ஆலால சுந்தரர் தனது மனதைப் பறிகொடுக்கலானார். இதனால் இவர் சிவபெருமானிடம் தண்டனை பெறவேண்டி ஏற்பட்டது. இறைவன் கட்டளைப் பிரகாரம் ஆலால சுந்தரர் மீண்டும் பூமியில் மானிட னாகப் பிறந்து இவ்விரு பெண்களையும் மணம் புரியவேண்டி நிர்ப்பந்தம். தன் தவறை உணர்ந்த ஆலால சுந்தரர் மனம் மிக நொந் தார். பூமியில் தான் இல்லற வினைகளில் ஈடுபடும் சமயம் தன்னைத் தடுத்தாட்கொள் ளும்படி இறைவனிடம் இறைஞ்சினார். எம் பெருமானும் அதற்கு உடன்பட்டார்.

ஆலால சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திரு நாவலூரிலே பிறந்து திருமணப் பருவமும் எய்தி திருமணமும் நிச்சயிக்கப் பெற்று மணப்பந்தலிலே மாப்பிள்ளையாக வீற்றிருக்கும் சமயம் எம்பெருமான் முதிய அந்தண வடிவம் தாங்கி நம்பியாரூரர் எனப் பெயர் பெற்ற ஆலால சுந்தரரை தடுத்தாட் கொள்ள வருகின்றார்.

திருமணப் பந்தலில் பிரவேசித்த எம் பெருமானான கிழ வேதியர் சபையோரை நோக்கிக் கூறுகின்றார்.

"மறையோர்களே! இந்த நாவலூர் நம்பி எனக்கு அடிமை. இந்த வழக்கைத் தீர்த்துக்கொண்டபின் இவன் என் சம்மதத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் புரியட்டும்" சபையோர் இம் மொழி கேட்டுத் திகைத்தனர். சிலர் நகைத்தனர். நம்பியாரூரர் சினம் கொண்டார். குற்றமற்ற சிவவேதியர்கள் வேறொரு வேதியர்க்கு அடிமையாதல் வழமையே அல்ல. எனவே நீர் பித்தனோ அல்லது பேயனோ? நம்பி இவ்வழி மொழியலானார்.

முதிய அந்தணர் தொடர்ந்தார். நீ என்னை அறிந்து கொண்டாயில்லை. அத னால்த்தான் என்னை நீ பித்தன் என்றும் பேயன் என்றும் வித்தகம் பேசுகின்றாய். எது பேசினும் நீயும் உனது முன்னோரும் எனக்குப் பணி செய்யும் அடிமைகளே! இன்றும் நீ நான் இடும் பணியைச் செய்தாக வேண்டும் என்றார் யாவரையும் வேற்றடிமை கொண்ட பெருமான்.

இவ்வண்ணம் வாதாடி முடிவில் நம்பியை தனது இல்லத்திற்கு வா நீயும் உனது முன்னோரும் எனக்கு அடிமை என்று எழுதப்பெற்ற மூல ஓலையைக் காட்டுகின் றேன் என்று கூறி இறைவன் நம்பியைத் திரு வெண்ணெய் நல்லூர் ஆலயத்திற்கு அழைத் துச் செல்கின்றார்.

அங்கே தன் தரிசனத்தைத் தந்து நம்பியை நெகிழ வைக்கின்றார் ஈசன். ஆலால சுந்தரரான நம்பியாரூரர் மட்டில்லா மகிழ்வும், வியப்பும் அடைந்து எம்பெருமானைத் தொழு கின்றார்.

ஐயனே! இது என்ன விளையாட்டு! அடியேன் தேவரீரை உணராது "பித்தா பேயா" என்று ஏசிவிட்டேனே! இதற்கு யான் எவ்வண்ணம் பரிகாரம் செய்யப் போகின்றேன்? நம்பியாரூரர் பாகாய் உருகுகின்றார்.

நீ என்னை எவ்வண்ணம் ஏசினாயோ அவ்வண்ணமே நீ என்னைப் பாடு. நான் மகிழ்வேன் திருவாய் மலர்கின்றார் ஈசன். பிறக்கின்றது பதிகம்! ஒலிக்கின்றது தேவாரம்.

பித்தா பிறை சூடி
பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே
நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தன்பால்
வெண்ணெய் நல்லூர் அருட்துறையில்
அத்தா எனக்காளாயினி
அல்லேன் எனலாமே.

எம் பெருமான் சுந்தரருக்காகப் புரிந்த ஒரு திருவிளையாடல்தான்.

முன் குறிப்பிட்டபடி, தான் தோழனாகப் பெற்ற நம்பியின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி, அத்தனையையும் நெஞ்சில் ஏற்று, ஏசிய வாயால் தம்பிரான் தோழனைப் பாட வைத்து அவரைத் தன் மீளா அடிமையாகக் கொண்டதும் ஈசன் திருவிளையாடல்தான்.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே!"

எனவே இத்தகைய ஈசன் அருளை இம்மியளவேனும் பெற யாம் முயற்சிக்க வேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...

திரு ரதன் குடும்பம் திரு வனஜன் குடும்பம் திரு நித்தியானந்தன் குடும்பம்	சரசாலை	1000. 00
சி. சிவராஜா	பிரான்ஸ்	5000. 00
யோ. சபிதா	வட்டக்கச்சி	2000. 00
கி. கஜேந்திரநாத்	யாழ்ப்பாணம்	5000. 00
J. விமலாதேவி	கெருடாவில்	5000. 00
திரு தங்கவேல் குடும்பம்	வல்வெட்டித்துறை (u.k)	5000. 00
கி. பாலசுப்பிரமணியம்	அமெரிக்கா	5000. 00
கந்தயானி குடும்பம்	லண்டன்	2000. 00
J. கமலநாதன்	கல்வியங்காடு	5000. 00
ஸ்ரீரஞ்சினி செல்வராஜா	மல்லாகம்	10000. 00
N. விநாயகமூர்த்தி	வல்வெட்டித்துறை	2000. 00
திருமதி K. அனுஷாந்தி	குப்பிளான்	2000. 00
செ. புனிதவதி	குப்பிளான்	1000. 00
இ. திருக்குமரன்	மானிப்பாய்	1000. 00
வி. அன்பழகன்	வட்டுக்கோட்டை	5000. 00
ஆ. தம்பாபிள்ளை	மட்டுவில்	1000. 00
கு. பேராயுதவன் குடும்பம், குமரதேவன் குடும்பம்	அராலி	2500. 00
செ. அமிர்தராஜா	வல்வெட்டித்துறை	10000. 00
Dr S. ரிஷாந்தன்	யாழ்ப்பாணம்	500. 00
Dr சுதுகுமார்	கரவெட்டி	1000. 00
Dr கந்தையா அனுஷாந்தினி	கொடிகாமம்	5000. 00
த. வினோபா	கரணவாய்	10000. 00
சிவலோகநாதன் காந்தி	கோண்டாவில்	1000. 00
த. தவராசா	கரவெட்டி	1000. 00
தி. திருச்செல்வம்	புத்தூர்	2500. 00
க. தயாபரன்	கொழும்பு	3மூடை அரிசி
K.V. துரைசாமி நினைவாக	மயிலிட்டி	1000. 00
ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ்	யாழ்ப்பாணம்	1புட்டி பருப்பு
சி. பகீரதன்	கனடா	5000. 00
கா. விஜயசுரேஸ்	சுவிஸ்	20000. 00
இ. சிவராஜா (இலங்கை வங்கி)	கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்)	15000. 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. ஆனந்தசேகரர்	வரணி	5000. 00
சாந்தி வைத்தியநாதன்	அவுஸ்திரேலியா	5000. 00
யோ. பத்மஸ்ரீ	லண்டன்	5000. 00
திரு அழகேஸ்வரன் குடும்பம்	நாவலடி	2000. 00
ம. ஜெயக்குமார்	நீர்வேலி	5000. 00
திரு மகேந்திரன் குடும்பம்	அரியாலை	1000. 00
கா. ஹரிசந்திரா	கொக்குவில்	1000. 00
ஐ. கிருபாமூர்த்தி	அச்சுவேலி	1000. 00
ஜெ. சந்திரப்பிரகாசம்	பருத்தித்துறை	8000. 00
க. திவாகரன்	கன்னாதிட்டி	1000. 00
மு. சுஸ்ருதன்	யாழ்ப்பாணம்	3000. 00
நாகேஸ்வரி செல்வராஜா	கனடா	10000. 00
இ. சிவராஜா	கரவெட்டி	10000. 00
இ. ரூபாசாந்தன்	கொழும்பு	5000. 00
வி. விஜயராஜா	வேலணை	5000. 00
சி. நடராஜா	மட்டக்களப்பு	2000. 00
கா. தர்மலிங்கம்	மட்டக்களப்பு	1000. 00
ஏ. சிவநேசன்	உடுவில்	1000. 00
திரு குமாரசாமி குடும்பம்	கரவெட்டி	1000. 00
திரு ஸ்ரீதரன் குடும்பம்	கரவெட்டி	1000. 00
ப. மகிதனன்	அளவெட்டி	5000. 00
செ. ரமேஸ்	நவக்கிரி	1புட்டி அரிசி
த. ஏடன்	வல்வெட்டித்துறை (கல்விச் செயற்பாட்டுக்காக)	15000. 00
நா. கணேசநாதன்	கொக்குவில்	600. 00
புனிதவதி சண்முகலிங்கம் குடும்பம்	கரணவாய்	10000. 00
அன்னை நாகா பூட்சிற்றி	யாழ்ப்பாணம்	5000. 00
V.P. பரமலிங்கம்	கந்தர்மடம்	11000. 00
கோ. ரரேஸ்	தம்பாலை	5000. 00
வி. கோபிநாத்		1500. 00
வ. மகிழன், வ. விதுஷன்	பருத்தித்துறை	10000. 00
பு. சரோன்	சுவிஸ்	1புட்டி அரிசி
க. சோமாஸ்கந்தர்	உசன்	5000. 00
ந. சேயோன்	உரும்பராய்	5000. 00
மதுரா வித்தியானந்தன்	கனடா	5000. 00
ஸ்ரீ. செந்தூரன்	திருநெல்வேலி	1000. 00
வே. பாண்டியர்	கைதடி	1000. 00
பி. டிவேஸ்	யாழ்ப்பாணம்	1000. 00
சண்முகநாதன் சுப்பிரமணியம்	கனடா	51000. 00

தைரியம், புத்தி, நுண்ணறிவு இவை மூன்றும் ஒருவருக்கு நல்ல நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. பானுமதிதேவி	யாழ்ப்பாணம்	மரக்கறி 2புட்டி அரிசி
பொ. கனேந்திரன்	கந்தர்மடம்	அப்பளம் 2புட்டி அரிசி
தி. பிரகதி	யாழ்ப்பாணம்	1000. 00
துஷ்யந்தன் விஜிதா	கோண்டாவில்	10000. 00
த. மகிதரன்	மல்லாகம்	1000. 00
பராசக்திராஜா நினைவாக P. சுபாங்கி மூலம்	இடைக்காடு	5000. 00
ச. வாசவன்	பருத்தித்துறை	5000. 00
கிருஷாந் மனோகரன்	நாவற்குழி	5000. 00
இ. ஜெயபரிபாலன்	உரும்பராய் கிழக்கு	2000. 00
தா. சிவானந்தன்	கனடா	5000. 00
த. கணேசலிங்கம்	ஆனைக்கோட்டை	2000. 00
சிவகலா வக்சலன்	கொழும்பு	5000. 00
R.G. சுகுனா	கொக்குவில்	5000. 00
திரு கிருஷ்ணதாஸ் குடும்பம்	தெல்லிப்பழை	5000. 00
சி. கந்தர்	இயற்றாளை	2000. 00
க. சுபேஷன்	இயற்றாளை	1000. 00
காணியா மோகன்	கனடா	5000. 00
திருமதி செல்வராஜேஸ்வரி	மானிப்பாய் வீதி	1000. 00
சதீஸ்குமார் தட்சணாமூர்த்தி, சங்கீதா உமாசங்கர் கனடா		113400. 00
க. தனோஜ்	ஜேர்மன்	5000. 00
சாய் கிருஷ்ணமூர்த்தி	லண்டன்	20000. 00
க. தங்கராசா (தனுஷ் கபே) ஓட்டுமடம்	யாழ்ப்பாணம்	7500. 00
ம. பூவேந்தன் (பகல் பராமரிப்பு நிலையம்)	சாவகச்சேரி	25000. 00
இராமலிங்கம் சகோதரிகள் நினைவாக (யாழ்ப்பாணம்)	கொழும்பு	50000. 00
திரு டனாஸ்	லண்டன்	10000. 00
திரு குலேந்திரராசா குடும்பம்	இணுவில்	15000. 00
அ. குமாரவேல் ஆசிரியர்	ஆனைக்கோட்டை	10000. 00
அ. யாழினி	ஆனைக்கோட்டை	5000. 00
சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்)	பருத்தித்துறை	(மாதாந்தம்) 1மூடை மா
தட்சணாமூர்த்தி பவனேசன்	நீர்வேலி	20000. 00
திருமதி உ. பேரானந்தம்	தெல்லிப்பழை	1000. 00
அருணகுலசிங்கம் நினைவாக	பருத்தித்துறை	20000. 00
கைலநாதன் ஆரபி	சுதுமலை	5000. 00
வை. சண்முகநாதன்	ஆனைக்கோட்டை	50000. 00
செ. கவிதா (லண்டன்)	வல்வெட்டி மாதாந்தம்	15000. 00
A.S. பூவேந்திரன்	கொழும்பு	(நிவாரணப் பணிக்காக) 5000. 00
திரு பிரபாகரன்	சுவிஸ் (இணுவில்)	(மாணவர்களுக்காக) 20000. 00
மு. சுஸ்ருதன்	யாழ்ப்பாணம்	15000. 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. பரமானந்தன் (தேனி)	மயிலிட்டி	1000. 00
திரு கோபிராஜ் குடும்பம்	கோண்டாவில்	10000. 00
சரவணமுத்து ஞானமலர்	டென்மார்க்	10000. 00
திரு ஞானபண்டிதர் மூலம் அரியராசா நினைவாக	தொண்டைமானாறு	100000. 00
உமாபதி ஸ்ரீதரன்	லண்டன் (மாணவர்களுக்காக)	14000. 00
J. சந்திரபிரகாசம் ஆசிரியர்	பருத்தித்துறை	5000. 00
சு. சிவதாசன்	புன்னாலைக்கட்டுவன்	4000. 00
நிர்மலா மூலம் பெற்றோரின் நினைவாக	தெகிவளை	10000. 00
பார்த்தீபன் சிவசொரூபி	சிங்கப்பூர்	22400. 00
பொ. ஞானச்சந்திரன்	லண்டன்	10000. 00
திரு ஜெயகாந்தன் (தேர் சிற்பாச்சாரியார்)	லண்டன்	10k பருப்பு, 1மூடை அரிசி
திருமதி சதாசிவமூர்த்தி	கனடா (திருமணநாள்)	35720. 00
ஞானரூபி கைதடி	(மலையக சிறுவர் இல்லத்துக்கு)	50000. 00
த. தெய்வேந்திரம்	நாகர்கோயில்	5000. 00
த. பொன்ராசா	மயிலிட்டி	10000. 00
திரு செந்தில்குமரன் குடும்பம்	இத்தாலி	35000. 00
S. கௌரி	அச்சுவேலி	5000. 00
செ. கந்தசாமி	கரணவாய்	5000. 00
நி. அனன்யா	கொழும்பு	5000. 00
தவமாறன் காயத்திரி	பிரான்ஸ்	25000. 00
கீதா நிர்மலதாஸ்	அவுஸ்திரேலியா	2148. 00
கா. பரநிருபசிங்கம்	அச்சுவேலி	1500. 00
N. ரட்ணம்	பருத்தித்துறை	10000. 00
க. ஞானச்சந்திரன்	கொக்குவில்	5000. 00
சற்குணநாதன் ஞானரஞ்சினி	ஜேர்மனி	10000. 00
S. வினோதன்	ஊர்காவற்துறை	5000. 00
த. பிரதீபன்	அராலி	1000. 00
S. அதிஷா S. தனிஷா S. அபிஷா	இணுவில்	5k தேயிலை 1மூடை சீனி
த. ராமச்சந்திரன்	ஊரெழு	5000. 00
கனகசபை திருச்செல்வி நினைவாக	கல்யாண சுப்பிரமணிய ஆலயம் சுவிஸ்	10000. 00
கா. துஷாலி	கொட்டாஞ்சேனை	3000. 00
P. கஸ்வினி	சங்கானை	500. 00
M. கிருஷிகா	வவுனியா	5000. 00
K. சிவராஜா	தெகிவளை	6000. 00
Dr ராதாகிருஷ்ணன் மூலம் க. மயூரன்	கரவெட்டி	10000. 00
வசீகரன் கேதாயினி	தெல்லிப்பழை	5000. 00

(தொடரும்...

அறிவைவிட தைரியத்தினால் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையின் பாதை

–திரு சி. நற்குணலிங்கம் அவர்கள்–

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய வாழ்வியல் சுற்றோட்டம் என்பது தற்காலத்திலே இடர்மிகுந்த பயணவெளியாகவே அமைந்துள்ளதை இன்று காணக்கூடியதாக உள்ளது. இவ் உலகில் வாழ்வதற்காக தெரிவுசெய்யப்பட்டுவிட்ட நாம் எப்படியோ வாழ்ந்துவிட்டு போவோம் என்ற நிலையில் பலர் வாழ்கிறார்கள். இன்று போதைப் பாவனை என்ற மாய வலைக்குள் இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை மூழ்கிவிட்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். போதைப் பொருட்களைப் பயன்படுத்தாதவர்களை விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அளவுக்கு நிலமை மிகவும் மோசமாகிவிட்டது. போதை சமூக, கலாசார, பொருளாதார விடயங்களில் செல்வாக்கு செலுத்துகின்ற ஒரு காரணியாகவும் மாறிக்கொண்டு செல்கிறது அல்லது மாறிவிட்டது என்றும் கூறலாம். ஒவ்வொரு நிமிடங்களிலும் போதையால் ஏற்படுகின்ற சாவுகளையும், அதன் புறத்தாக்கங்களையும் எமது சமூகம் அனுபவித்துக்கொண்டே இருக்கிறது.

இலங்கை போதைப் பாவனை என்ற விடயத்தில் மிகவும் உச்ச, அபரிதமான வளர்ச்சியையே ஏற்படுத்தி நிற்கிறது. உலக மயமாதல் சூழலுக்குள் சிக்கிக் கொண்டுவிட்டதுடன் அதன் பிரதிபலன்களில் இருந்து மீண்டுவர முடியாத நிலையும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. கொக்கெயின், ஹெரோயின், ஒப்பியம், ஹஷீஸ், கஞ்சா, அபின், போதைப் பாக்கு எனப் பல்வேறுபட்ட போதையூட்டிகள் எம்மிடையே பரவலடைந்து சுதந்திரமாக உலவித்திரிகின்றன. ஹெரோயின் அவற்றுள்ளே முன்னிலை பெற்றுள்ளது. அறிவையும், ஆயுளையும் களவாடும் கொடியவனான போதை அரக்கனை நாட்டிலிருந்து விரட்டுவது என்பது அனைவருக்கும் உரித்தான கடமை ஆகும்.

போதைப் பொருள்களின் பரிமாற்றமும் நுகர்வும் கட்டுப்பாடுகள் இன்றி எங்கும் பரம்பலடைந்துள்ளன. இலங்கையில் பாவனையிலுள்ள 648 வகையான போதைப் பொருள்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வில்லைகள், குளிசைகள், ஸ்ரிக்கர்கள், ஜஸ் போன்ற பல்வேறு உருவங்களில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சிறப்பாக கடல் மார்க்கமாகவே கொண்டுவரப்படுகின்றன. கொக்கையின் போதைப் பொருள் பெரும்பாலும் பிரேசில் நாட்டிலிருந்து கொண்டு வரப்படுகிறது. 2017.07.20 அன்று 320 கோடி பெறுமதியான கொக்கெயின் பிரேசில் நாட்டிலிருந்து வந்த சீனி கன்ரெயினரிலிருந்து 10 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கல்கிசைப் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது ஒரு பொதியில் சுமார் 16 கிலோ கிராம் அளவு கொகெயின் பிடிக்கப்பட்டது. போதைப் பொருள் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தல்களுடன் இணைந்த நிகழ்வுகள் துயரம் மிக்கவை.

ஆய்வுகளின் படியான தகவல் அடிப்படையில் இலங்கையில் 5 இலட்சம் பேர் வரையானோர் போதை உண்ணிகளாக உள்ளனர். உலகளவில் மதுப் பாவனையில் இலங்கை 2018ஆம் ஆண்டில் நான்காம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இருந்தது. அத்துடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி இலங்கையில் 13 வயது தொடக்கம் 15 வயது வரையான பாடசாலை மாணவர்களில் 11 வீதத்தினர் புகைத்தல் பழக்கத்துக்கு ஆளாகி உள்ளனர். இன்னொரு ஆய்வின்படி இலங்கையில் 50 ஆயிரம்பேர் கெரோயினுக்கும், 1 இலட்சம் பேர் கஞ்சாப் பாவனைக்கும் அடிமைப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. இலங்கையில் மேல் மாகாணம் அதிகமான போதைப் பாவனை உள்ள பிரதேசமாக உள்ளது. குற்றச்செயல்களில் 38 வீதமானவை போதையாலும், விபத்துச் சம்பவங்களில் உயிர் இழந்தவர்களில் 90 வீத இறப்புக்கு போதையே காரணமாக உள்ளதாக சுகாதாரத் துறையின் அறிக்கை சுட்டி நிற்கின்றது.

இலங்கையில் 2,50,000 இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் சுமார் 60 ஆயிரம் இளையோர் ஹெரோயின் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். 14 வயதுக்கு மேற்பட்ட 13 வீதமான மாணவர்கள் போதைப் பொருள் பாவிக்கின்றனர். போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களின்பேரில் நாடு பூராகவும் 2018ஆம் ஆண்டில் சுமார் 40 ஆயிரத்து 870 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 2017ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 514பேர் போதைக்கு அடிமையாகி உள்ளனர். வவுனியாவில் 158 பேரும், மன்னாரில் 82 பேரும் மட்டுமே வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் போதைக்கு அடிமையாவது அதிகரித்து வருவதாக மாவட்ட உளநல மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் புகைத்தல் பாவனையில் 42.9 வீதமான பங்களிப்புடன் யாழ் மாவட்டம் முதல் இடம்பெற்றுள்ளது. இளிப்புக் கலந்த பாக்குப் பைக்கற் விற்பனைக்கு வைத்திருந்த வியாபாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சுகாதாரப் பரிசோதகர்களால் ஒப்படைக்கப்பட்டு ரூபா 10,000 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது.

பிரேசில், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கடல் வழியாக உள்நாட்டில் ஊடுருவ விடப்படுகின்றன. இது தமிழ் சமூகத்தை சீரழிக்கும் மிக முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. ஜனநாயக விழுமியங்களையே ஆட்டம் காண வைக்கும் சக்தியாக போதைப் பொருள்களின் நடமாட்டமும் பாவனையும் உள்ளது. போதை தலைக்கு ஏறியதும் அவர்களில் கண்டுகொள்கின்ற நடத்தை மாற்றங்களை சகித்துக்கொள்ள முடியவில்லை. மிருகங்களை விடவும் கீழ்மைக் குணம் உடையோராக இவர்கள் நடந்து கொள்கின்றனர். போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த தவறும் ஒவ்வொரு நிமிடமும் வடக்கில் வாள்வெட்டு, குழுமோதல், கல்வியில் சீரழிவு, கொள்ளை, கொலை, களவு, வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல்கள் அரங்கேறும்.

செப்	05	ஆவ	20	திங்கள்	குங்குலியக்கலயர்
செப்	24	புர	07	சனி	அருநந்தி சிவாச்சாரியார்
செப்	27	புர	10	செவ்வாய்	சங்கரபண்டிதர்
ஒக்	08	புர	21	சனி	கடையிற்சுவாமி
ஒக்	26	ஐப்	09	புதன்	மெய்கண்டதேவர்

சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

தமிழ்ப் பெண் கவியரசிகள்

– இரா. செல்வவடிவேல் அவர்கள் –

குண்டலினி யோகம்

முதுகுத்தண்டில் (முள்ளந்தண்டு) இரண்டு நரம்பு ஒட்டங்கள் உள்ளன. வலப்பக்கத்தில் உள்ளது பிங்கலை நாடி இடப்பக்கம் உள்ளது இடக்கலைநாடி. முதுகுத் தண்டின் வழியாக உள்ளே ஒரு துளை பொருந்திய நாளம் செல்கிறது. அதுதான் கழுமுனை எனக் கூறப்படுகிறது. கழுமுனையின் கீழ் நுனியைக் குண்டலினிக் கமலம் என்று யோகிகள் கூறுவர். குண்டலினி மகாவாயு எனவும் கூறப்படுகிறது. முக்கோண வடிவில் இருப்பதாகவும் அதில் குண்டலினி சக்தி பாம்பு போன்று சுருண்டு படுத்து உறங்குவதாகவும் கூறுகின்றனர். குண்டலினி விழித்து எழும்போது மனத்தின் திரைகள் ஒன்றன்பின் ஒன்றாக விலகுகின்றன. அந்நிலையில் பல தெய்வீகக் காட்சிகளும் அற்புத ஆற்றல்களும் வந்தடைகின்றன.

முதுகுத் தண்டில் உள்ள வெவ்வேறு மண்டல மையங்களை வெவ்வேறு தாமரைகளுக்கு ஒப்பிடலாம். அடியிலுள்ள மூலாதாரத்தில் தொடங்கி மேலே மூளையிலுள்ள ஆயிர இதழ்த் தாமரையாகிய சகஸ்ராரத்தில் முடிவுபெறும். முதுகுத் தண்டில் பல சக்கரங்களாகிய மையங்கள் இருப்பதாக யோகி உணர்கின்றான். ஒவ்வொரு மையமும் ஒரு தாமரையாகக் கூறப்படுகிறது.

அந்த மையங்கள் (தாமரைகள்) வரிசையாக உள்ளன. அவை பின்வருவன

1) மூலாதாரம் (முதுகின் அடியில்)
2) சுவாதிஷ்டானம் (நாபிக்கும் மூலாதாரத்திற்கும் இடைப்பகுதி)
3) மணிபூரகம் (நாபியிலுள்ள தாமரை)
4) அனாகதம் (நெஞ்சுப்பகுதி)
5) விசுக்தி (தொண்டையின் அடி)
6) ஆக்ஞை (கண்களுக்கு இடைப்பகுதி)

அடியிலுள்ள மூலாதாரத்திலிருந்து சக்தியை (மனத்தால்) சகஸ்ராரத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தெய்வீக ஞானம் பெறுவதற்கும் உணர்வு கடந்த காட்சிக்கும் பரமாத்மா வினை அடைவதற்கும் ஒரே வழி குண்டலினி சக்தியை எழுப்புவதே.

குண்டலினி சக்தி மேலே ஒவ்வொரு சக்கரத்தின் வழியே செல்லும்போது மனத்தின் பல வழிகளும் திறக்கப்பட்டுப் பிரபஞ்சத்தை நுட்பமான காரண நிலையில் யோகி காண்கிறார். அண்டங்களுக்கு உணர்ச்சியாகவும், செயலாகவும் அமைந்துள்ள ஆதி காரணம் அவருக்குத் தெளிவாகிறது. எல்லா அறிவும் அவருக்குக் கிடைக்கிறது.

குண்டலினி சக்தி ஆக்ஞா நிலையை எட்டிய உடன் சாதகர் இறைநிலையெய்தி ஆனந்தம் அடைகிறார். அதற்கு மேலான சகஸ்ராரத்தை (ஆயிரம் இதழ்தாமரை) அடைந்ததும் இறைவனோடு இரண்டறக் கலந்து சமாதி நிலையில் பேரானந்தப் பெருங்களிப்பில் மூழ்கித் திளைக்கிறார். அவருக்கு மரணமில்லை. அவர் மரணமில்லாப் பொருவாழ்வு எய்தியவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குறிப்பிடப்பட்ட முதுகுத்தண்டு, இடைகலை, பிங்கலை, நாடிகள், முதுகுத்தண்டுப் பகுதிகள், ஆயிரம் இதழ் தாமரை போன்றவை மருத்துவத்துறையில் வெவ்வேறு பெயர்கள் இடப்பட்டு அழைக்கப்படுகின்றன. இவற்றின் செயற்பாடுகளை மருத்துவ விஞ்ஞானமும் விளக்கியுள்ளது. யோகிகள் கண்ட உண்மையை மருத்துவ விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டு வேறு வகையில் விளக்குகின்றார்கள்.

விநாயகர் அகவல்

ஔவையார் அருளிய விநாயகர் அகவல் முழுக்க முழுக்க குண்டலினி யோகத்தைப் பற்றியதாகும். விநாயகப் பெருமானின் தோற்றப்பொலிவை அழகுற வர்ணித்துவிட்டு

"சொற்பதம் கடந்த தூய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே" என விளித்துப் பின்னர்
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத்தான் எழுந்தருளி
மாயப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயம் தன்னில்...
தோன்றி நிலையான பொருளை வணங்கியருள வேண்டும் என்கிறார்.

"ஐம்புலன் தன்னை அடக்கும் "உபாயத்தைத் தமக்கு அருளுமாறு வேண்டுகிறார்.

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கு உயர்ந்த முத்திகளையும் அருள ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தால் ஏற்படும் மயக்கத்தைப் போக்கி, பிரணவ மந்திரத்தின் துணையால் இவ்வுடலின் ஒன்பது வாசல்களையும் ஐம்புலன்களாகிய கதவுகளையும் அடைக்கும் வழியைக் காட்டிப் பின்னர்,

"ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் கழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணில்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
வீண்டெழ மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே"

எனக் குண்டலி போகத்தைப்பற்றி விளக்குகிறார்.

அதாவது மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், ஆக்ஞை, விசுத்தி என்னும் ஆறு ஆதாரங்களையும் கடந்த நிலையில் பெறுதற்கரிய பேறாகத் தமக்கருளி, மௌன நிலையை அளித்து இடைபிங்கலை என்னும் நரம்புகள் மூலம் பிராண வாயுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை கொண்டு குண்டலியைக் கழுமுனை வழியில் கபால வாயில் வரை செலுத்தும் வகையைத் தமக்கு அறிவித்து அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களையும் ஊடுருவி நிற்கும் தூணாகிய கழுமுனையின் அடியில் தொங்கிக் கொண்டிருக்கும் பாம்பாகிய குண்டலினியை எழுப்பி அக்குண்டலினியிலிருந்து மௌனமாக ஒலிக்கும் அசபை என்னும் ஹம்ஸ் மந்திரம் தெளிவாக ஒலிக்கும்படி செய்து மூலாதாரமாகிய அக்கினி மண்டலத்திலுள்ள கொழுந்துவிட்டெரியும் குண்டலினியை மூச்சுக் காற்றினால் ஏற்படும் பிராண சக்தியின் துணைகொண்டு எழுப்பும் வழியைத் தமக்கு அறிவித்ததாக கூறுகிறார்.

"அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும்...."

அதாவது குண்டலினி சகஸ்ராரத்தை அடையும்பொழுது ஏற்படும் அமுத நிலையையும் சூரிய நாடியாகிய பிங்கலையின் இயக்கத்தையும், சந்திர நாடியாகிய இடையின் இயக்கத்தையும் தமக்கு விளக்கியதாகக் கூறுகிறார்.

மேலே குறிப்பிடும் அமுததாரை (அமுத நிலை) பற்றி ஔவைக் குறளில் கூறுவதையும் பார்க்கலாம்.

"ஓங்காரமான கலசத்து அமிர்து உண்ணின்
போங்கால மில்லை புரிந்து"

(ஔவைக் குறள் 63)

"ஊறும் அமிர்தத்தை உண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம்"

(ஔவைக் குறள் 65)

"மேலை யமிர்தை விலக்காமல் தானுண்ணின்
காலனை வஞ்சிக்க லாம்"

(ஔவைக் குறள் 67)

என அந்நிலை பிறப்பறுக்கும் நிலை, காலனை விரட்டும் நிலை அதாவது மரணமில்லாப் பெருவாழ்வு நிலை எனக் குறிப்பிடுகிறார். பின்னர்,

"கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக்கு அருளி"

அதாவது கபால வாயிலில் உள்ள சகஸ்ராரம் என்னும் சக்கரத்தைக் காட்டிச் சித்திகளும் முத்தியும் தமக்கு அருளியதாக கூறுகிறார்.

"என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து....."

அதாவது தம்மைத் தாம் உணரும்படி தமக்கு அருள் செய்து, தாம் முன் செய்த வினைக்குக் காரணமாகிய ஆணவ மலத்தை நீக்கிச் சொல்லும் எண்ணமும் கடந்த "மனோலயம்" என்னும் நிலையைத் தமக்கு அருளியும் உள்ளம் தெளிவாக இருக்குமாறு செய்ததாக விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள் வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி"

அருளியதாகவும் கூறுகின்றார். நாதமாகிய புறவுலகிலும் சித்தமாகிய அகவுலகிலும் சிவனைக் காணும்படி அருளியதாகக் குறிப்பிடுகிறார். இங்கு "தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் என்று திருமூலர் குறிப்பிடுவதும் கருதத்தக்கது. பின்னர்

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நைஞ்சுக் கரத்தின் நிலை யறிவித்துத்
தத்துவ நிலையை தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

அஞ்செழுத்தின் மேலான பொருளைத் தம் நெஞ்சில் நிலையாக இருக்கும்படி அறிவித்து உண்மை நிலையைத் தமக்கு அருளித் தம்மை ஆட்கொண்ட ஞான வடிவாகிய விநாயகப் பெருமானின் நறுமணம் கமழும் பாதங்களைச் சரணடைவதாகக் கூறியுள்ளார்.

எனவே, ஔவை அடிகளார், விநாயகப் பெருமான் வழி, குண்டலினி யோகத் தத்துவத்தை உணர்ந்து, அதனை மேற்கொண்டு ஒழுகி, அவரைச் சரணடைந்து ஐக்கியமாக மரணமிலாப் பெருவாழ்வு பெற்றார்.

ஔவையார் ஞானத் திருவுருவாக விளங்கி, சமூகத்திற்கு, என்றும் பயனுள்ள கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். ஔவையாரின் பல பாடல்கள் இன்னும் அறியப்படாமல் இருக்கின்றன. ஔவையாரின் பாடல்களில் தத்துவம் காணப்பட்டதுடன் காதல் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றை இனிப் பார்ப்போம்.

காதல் காட்சிகள்

ஔவையார் காலமெல்லாம் கன்னியாகவே வாழ்ந்தவர். குழந்தைகள் முதல் முதியோர்வரை, பாமரர் முதல் பண்டிதர் வரை, ஆண்டி முதல் அரசர் வரை அனைவர்க்கும், ஊரெங்கும், நாடெங்கும் கால்நடையாகவே நடந்து சென்று அறிவுரையும், அறவுரையும், அருளுரையும் வழங்கிக் கன்னித் தமிழ் வளர்த்த அன்னையவள். இதனை முன்னரும் அறிந்து கொண்டோம்.

அவர் காதல் சுவையையும் கவினுற விளக்குவதில் கைவந்த கலைஞர் என்று கூறின் பலருக்கு வியப்பளிக்கும்! அவர் பாடியுள்ள சங்கப் பாடல்களைப் படித்தால் இந்த உண்மை இனிது புலனாகும்.

காதலரின் களவு வாழ்க்கை, பிரிவால் படும் வேதனை, காமநோய் தரும் கட்டுக்கடங்காத கவலை, காதலியையும் காதலனையும் சந்திக்க வைத்து, உறவினை உரமேற்றி, களவு வாழ்க்கையை விடுத்து விரைவில் திருமணம் செய்துகொள்ளச் செய்யும் தோழியின் நுண்மதி, சூழ்ச்சித்திறன் இவற்றையெல்லாம் பொருத்தமான உவமை நயத்துடன் விரித்து விளக்கும் பாங்கு எண்ண எண்ண இன்பத்தில் நம்மைத் திளைக்க வைக்கும்! அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலைவனும் தலைவியும் காதலில் திளைத்துக் களிப்புடன் வாழ்கின்றனர். அவர்கள் இல்லற வாழ்க்கையில் நிலைத்து இன்புற்று வாழப் பொருள் - செல்வம் வேண்டுமல்லவா? அப்பொருளை ஈட்டி வருவதற்குத் தன் ஊரைக் கடந்து வேற்றூருக்குச் செல்கிறான் தலைவன். இடையில் வாட்டும் கொடிய காட்டை - பாலை நிலத்தைக் கடந்து செல்ல வேண்டும்.

அக் காட்டில், சூரியன் தீக்கனலைப்போலச் சிவந்து வெங்கனலை வீசிக்கொண்டிருக் கிறதாம். அங்கு ஓரிடத்தில், இலையற்றுப்போன இலவ மரங்கள் உள்ளனவாம். அரும்பு அற்றுப்போன அந்த இலவம் பூக்கள் வெடித்து வெள்ளை நிறப் பஞ்சுகள் வெளியே தோன்றிக் கொண்டிருக்கின்றனவாம்.

இலையற்று, அரும்பிழந்த இலவம் பூக்கள் (பஞ்சுகள்) வரிசையாக மலர்ந்துள்ள அக்காட்சி, தீபாவளி - கார்த்திகை விழாவின்போது மங்கல மங்கையர் உரக்க உரையாடிக் கொண்டே மகிழ்ச்சியோடு வரிசையாக ஏற்றிவைக்கும் விளக்குகளைப் போன்றுள்ளதாம். எவ்வளவு பொருத்தமான வியத்தகு உவமை!

சங்க காலத்தில் இத் தீபாவளித் திருநாள் கார்த்திகை விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது என்னும் சரித்திரச் சான்றையும் இதன்மூலம் ஔவையார் குறிப்பிடுகிறார். தீபாவளி என்பது தீபம்+ஆவளி என்னும் இரு சொற்களின் சேர்க்கை "ஆவளி" என்பதன் பொருள் "வரிசை" என்பது. கார்த்திகைத் திருநாள்களில் வீடுகளிலும், வீதிகளிலும், உள்ளேயும், புறத்திலேயும் தீபங்கள் வரிசை வரிசையாக ஏற்றப்பட்டு, இரவைப் பகலாக விளங்க வைக்கும் காட்சியை நாம் காண்கிறோம். இதுதான் உண்மையான "தீபாவளி"த் திருநாள். "தீபாவளி"யன்று மங்கல மடந்தையரும், மக்களும், பிறரும், புனித நீராடிப் புத்தாடை உடுத்து, பலவகை இனிய பண்டங்கள் படைத்து, ஒளிமயமாக விளங்கும் பரம்பொருளை வழிபட்டு மகிழ்வர்.

இத் தீபாவளித் திருநாள்தான் அக்காலத்தில் கார்த்திகைத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஏன் இன்றும் தமிழகத்திலும் தமிழர் வாழும் பிறபகுதிகளிலும் இக் கார்த்திகை நோன்பும், விழாவும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இந்தத் தீபாவளியை - கார்த்திகைத் திருநாள் காட்சியை உவமையாக வைத்து ஔவையார் விளக்கும் காதலர் செயலைக் காண்போம்.

முன்னே குறிப்பிட்டவாறு, கொடிய வெயில் காயும் அக் கடுங் கானகத்தில் ஆங்காங்கே உள்ள சில குளங்களும், நீர் அறவே வற்றிப் புழுதி படிந்து கிடக்குமாம். "அந்தக் கொடிய பாலை வழியே சென்ற என் காதலர் என்னையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றிருக்கலாமே! அப்படிச் சென்றிருந்தால் - நானும் உடன் சென்றிருந்தால் அங்குள்ள காட்டாற்றங்கரை மணல் மேட்டில், அவர் என்னைத் தழுவி, உடல்கள் ஒன்றுடன் ஒன்று உட்புகுந்து விட்டாற்போன்று இணையும் இன்பத்தை அவர் துய்த்துக் களிக்கலாமே! என்று அங்கலாய்க்கிறாளாம் அந்தக் காதலி. இக் கருத்திலமைந்த பாடல் இதோ:

"வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப் பெனச் சிவந்த உருப்பவிர் அம்காட்டு
இலையில மர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயம்துகள் ஆகிய பயம்தபு கானம்
எம்மொடு கழிந்தனர் ஆயின்
பொங்கு மணல் கான் யாற்று எக்கர்
மெய்புகுவு அன்ன கைகவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னே"

(அகநானூறு 11)

வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்- வானத்தில் ஊர்ந்து செல்லும் சுடரினையுடைய சூரியன்; கலிகொள் ஆயம்- ஆரவாரத்தோடு (உரத்த குரலோடு) உரையாடும் மகளிர் கூட்டம்; மலிபு தொகுபு எடுத்த- மகிழ்ச்சியோடு ஏற்றிய; அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றும்- அழகிய கார்த்திகை விளக்கீடு விழாகாண் நெடிய விளக்கு வரிசை போலத் தோன்றும்; பயம்தபுகானம்- வளமற்று வறண்டகாடு; எம்மொடு கழிந்தனர் ஆயின்- என்னையும் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தால்; கான்யாற்று எக்கர்- காட்டாற்று மணல்மேடு; மெய்புகுவு அன்ன கைவர் முயக்கம்- உடலோடு உடல் புகுந்தது போன்று இணைந்து தழுவுதல்.

இவ்வாறு தமிழ்ப்பெண் கவிகளில் ஒருவராகிய ஔவையார் பாடிய பாடல்கள் பல்சுவை நிரம்பியதாகும்.

(தொடரும்...

மேலை நாட்டு இளைஞர்கள் கூடுதல் சுதந்திரம் உடையவர்கள். தன்னம்பிக்கை அதிகம். மிக இளம் வயதிலேயே சுகபோகங்களை நுகர்கிறார்கள். அப்படியான சமுதாயத்தில் சமகாலத்தில் வாழும் நமது பிள்ளைகள் பலபேர் பெற்றோரின் பாதுகாப்பு வலையத்திற்குள், அளவான சுதந்திரத்தோடும், சுமாரான தன்னம்பிக்கையோடும், கற்பனை சுகபோகங்களுடன் காத்திருக்கிறார்கள். அப்படியான நமது பிள்ளைகளுக்குச் சக பிள்ளைகளிடமிருந்து கிடைக்கும் பெயர் "கையாலாகாதவன்". இப் பெயரைக் கேட்டும் தன்னிலை மாறாத நம் பிள்ளைகள் பலர் உண்டு. ஒரு சிலர் தமது சுய கௌரவத்தைச் சீண்டிப் பார்க்கும் நண்பர்களின் சொற்களால் தடம் மாறுவதுண்டு. அப்படித் தடம் மாறியதை வீட்டில் மறைப்பதற்கு பல பொய்களை அவர்கள் தேடவேண்டி உள்ளது. அவர்கள் பொய் கூறுவதற்குக் காரணம் பெற்றோர்மீது கொண்ட பயம்தான். பெற்றோர்களே! இப்படியான சந்தர்ப்பங்களில் உங்கள் பிள்ளைகளை அரவணைத்து புத்திமதி கூறுங்கள். அன்பினால் அவர்களை மாற்றுங்கள். அவர்கள் படிக்கின்ற நீதிக் கதைகள் ஓரளவுதான் அவர்களை உயர்த்தும். நீதிமானான தாய் – தகப்பன், ஆசிரியர் ஆகியோர்தான் குழந்தைகளை அதிக உயரத்திற்குக் கொண்டுபோகக் கூடியவர்கள்.

சிறுவயதில் தோட்டத்தைச் சுத்தம் செய்யும்போது, அப்பா ஆசையாக வளர்த்து வந்த "செரி" செடியை வெட்டிவிட்டான் அந்தச் சிறுவன். "யார் வெட்டியது" என்று அப்பா கர்ஜித்தபோது, பயந்துகொண்டே "நான்தானப்பா" என்றான் சிறுவன். சற்றும் எதிர்பாராதபடி கட்டியணைத்து முத்தம் கொடுத்து "இனி இப்படிச் செய்யாதே" என்றார் அப்பா. ஆச்சரியப்பட்ட அம்மாவும் "அவனை அடித்து நொருக்கி விடுவீர்களோ என்று பயந்தேன்" என்றார். "அதெப்படி உண்மையைச் சொல்லும் குழந்தையைத் தண்டித்துவிட்டால், வாழ்நாள் முழுவதும் அந்தப்பிள்ளை உண்மையிலிருந்து விலகியல்லவா போய்விடும்" என்றார் அப்பா. அந்த உயர்வான அப்பாவினால் தட்டிக்கொடுக்கப்பட்ட அந்தச் சிறுவன்தான் பின்னர் அமெரிக்காவின் முதல் பிரதமரான ஜார்ஜ் வாஷிங்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவினால் சுட்ட வடு!

– து. சிந்துஜா அவர்கள் –

பேச்சு சுதந்திரம் அனைவருக்கும் உரியதே. சக மனிதர்களுடன் பேசினால்தான் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். அதிகமாகப் பேசினால் "நச்சரிப்பு", அளவாகப் பேசினால் "திமிர் பிடித்தவர்", தேவைக்கு மட்டும் பேசினால் "சந்தர்ப்பவாதி". இவ்வாறு ஒருவர் பேசும் விதத்தை வைத்தே அவரை நாம் எடைபோட்டு விடுவோம்.

சிலர் இருக்கின்றனர், பேச்சு சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக எந்த இடத்தில் எதைப் பேசவேண்டும், எவ்வாறு பேசவேண்டும் என்று தெரியாமல், அவர்களின் விருப்பத்துக்கு ஏதேதோ பேசுவர். பெரும்பாலும் இது குடும்பங்களில்தான் அதிகமாக நடக்கிறது. சொத்து தகராறு, குடும்பப் பிரச்சினை என்று வந்துவிட்டால் போதும். அந்தச் சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தன் இஷ்டத்துக்கு எதிரில் இருப்பவர்களைத் தூற்றுவார்கள். அதுதான் "வீரம்" என்றும் அவர்களின் மனதில் ஓர் எண்ணமுண்டு. உண்மையில், அதுவல்ல வீரம். இவ்வாறு மற்றவர்களைப்பற்றி இழிவாகவும் தரம் குறைவாகவும் பேசுவது மிகவும் கீழ்த்தரமான, அவமரியாதையான செயல். இவ்வாறு பேசுகிறவர்கள், அண்ணாந்து பார்த்து மேல்நோக்கி எச்சில் உமிழ்பவர்கள்.

அந்தக் காலத்தில் பெரியவர்களுக்கென ஒரு மரியாதை பேணப்பட்டது. ஆனால், இந்தக் காலத்தில் பெரியவர் என்ன, சிறியவர் என்ன! வயது வித்தியாசம் பார்க்காமல், வார்த்தைகளை அள்ளி வீசிவிடுகின்றனர்.

வாங்கிய அடியின் வலியைக்கூட காலம் மாற்றிவிடும். ஆனால் வாயில் இருந்து உதிர்த்த வார்த்தைகளின் தாக்கம், உயிர் போகும் நிலையில் கூட குறைவதில்லை. அதனால்தான் திருவள்ளுவர்,

"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்று கூறியிருக்கிறார்.

வெறும் வார்த்தைகள் தானே என்று நினைத்து எதையும் பேசிவிடக்கூடாது. அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெறுமதி உண்டு.

எம் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகள் பிறரைப் போற்றும் விதமாகவோ அல்லது பிறரை மகிழ்விக்கும் விதமாகவோ கூட அமையாதிருக்கலாம். ஆனால், பிறரை மனம் நோகச் செய்யும் விதமாக ஒருபோதும் அமைந்துவிடக்கூடாது. கோபத்தில் வெளிவிடும் வார்த்தைகளுக்கு ஆயுள் மிகக் குறைவுதான். ஆனால் அது ஏற்படுத்தும் காயத்துக்கு ஆயுள் அதிகம் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சிலரோ அம்மாதானே, மனைவிதானே, கணவன்தானே, பிள்ளைகள்தானே, நம் உறவுகள்தானே..... என்ன செய்துவிடப் போகிறார்கள் என்று வாய்க்குவரும் வார்த்தைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அள்ளி வீசிவிடுவர். ஆனால் அவற்றின் பாதிப்பை உணர்வதில்லை. காலமும் நேரமும் அதை உணர்த்தும்போது அவர்கள் அருகில் யாரும் இருக்கமாட்டார்கள்.

பிள்ளைகள் வளர்ந்து பேச ஆரம்பிக்கும்போதே யாரிடம் எப்படிப் பேசவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். அதையே பெற்றோர்களும் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில், பிள்ளைகள் கெட்ட வார்த்தைகளை அல்ல... கேட்ட வார்த்தைகளையே பேசுகிறார்கள்.

எனவே, சிறு வயது முதற்கொண்டே பேசுகின்ற வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். இன்றைய குழந்தைகள் நாளைய நாட்டின் மதிக்கத்தக்க மனிதர்களாய் திகழவேண்டுமாயின், பேசுவதன் நல்ல - தீய விளைவுகளையும் அவர்கள் நன்கறிந்திருக்க வேண்டும்.

என்னதான் மாடமாளிகையில் வாழ்ந்தாலும், அளவுக்கதிகமான பணத்தை கையில் வைத்திருந்தாலும் எமது சொல்லில், செயலில் கண்ணியம் இல்லாவிட்டால், எம்மிடம் இருக்கும் செல்வங்கள் அனைத்தும் வெறும் தூசுக்குச் சமம்.

நம்மை மற்றவர்கள் மதிக்கவேண்டுமென்றால், மற்றவர்களின் மதிப்பை நாம் எதிர்பார்ப்பதனால், எமது வெளித்தோற்றத்தை மட்டும் சிறப்பாக மாற்றிக்கொண்டால் போதாது. எமது பேச்சு, செயல் எல்லாவற்றையும் பிறர் மதிக்கும் வண்ணம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இது பிறருக்காக அல்ல. தனக்கான ஒரு நல்ல மாற்றமும் கூட.

முதலில் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர்களை மதித்து, அவர்களிடம் நல்ல முறையில் நடந்துகொண்டார் என்றால், அவர் வெளிநபர்களிடம் மதிப்பைப் பெறுவார்.

எனவே, எமது வார்த்தைகளை பிரயோகிப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், கூறிய வார்த்தைகளைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளும் சக்தி உலகில் யாருக்கும் இல்லை.

-நன்றி: மித்திரன்-

உலகில் காணும் அசையும் அசையாத அனைத்துமே ஒரு ஆதார சக்தி இல்லாமல் இயங்கமுடியாது. மண்ணில் ஊன்றப்பட்ட தாவரங்களிலிருந்து எத்தனை விதமான சுவைகள் வெளிவருகின்றன. இனிப்பான கிழங்கு, கசப்பான பாகற்காய், புளிப்பான எலுமிச்சை, மல்லிகையின் நறுமணம் இப்படி இவை எல்லாம் எங்கே ஒளிந்திருந்தன. மண்ணுக்குள்ளா? அப்படியானால் மண்ணைச் சுவைத்தால் அது சுவைக்கவேண்டுமே! இளநீரின் தித்திப்புக்குக் காரணம் தென்னையின் வேரில் ஊற்றப்படும் தண்ணீரா? தண்ணீருக்கும் சுவை இல்லையே. இவையெல்லாம் யார் செய்த மாயாஜாலம். இயக்குபவன் ஒருவன் இல்லாவிட்டால் இவையெல்லாம் சாத்தியமா? இதிலிருந்து உலகில் எதுவும் நம்மால் நடைபெறுவதில்லை என்பது நிச்சயமாக தெரிகிறதல்லவா?

இறைவன் கூறுகின்றார்: கடிக்கின்ற பாம்பும் நானே! அந்த விஷத்தை நீக்கிக் குணப்படுத்துகின்ற மந்திரவாதியும் நானே! தண்டனை வழங்குகின்ற நீதிபதியும் நானே! தண்டனையிலிருந்து வெளியே வர வாதாடுகின்ற வக்கீலும் நானே! வீட்டுக்குக் கன்னம் வைக்கின்ற திருடனும் நானே! அவனைக் கைது செய்யும் போலீசும் நானே! ஆஸ்திகனும் நானே! நாஸ்திகனும் நானே! அனைத்திலும் நானே.

தேவைப்படும்போது தேடப்படுவாய். அதுவரை அமைதியாய் இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் திருவருள் திறன்

–திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்–

முருகு என்றால் அழகு, செம்மை, நன்மை எனப் பொருள் கொள்வர். முருகன்- அழகுள்ளவன்; அழகன்; சகலருக்கும் நன்மை செய்பவன்; எங்கு ஒழுங்கு குன்றுகின்றதோ, அங்கு விரைந்து சென்று ஒழுங்கினை நிலைநாட்டுபவன். சூரசங்காரம் இதனை உறுதிப்படுத்து கின்றது.

முந்தொரு காலத்தின் மூவுலகந் தன்னில்
வந்திடுமுயிர் செய்த வல்வினை யதனாலே
அந்தமில் மறையெல்லாம் அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரும் மருளுற்றார்.

-கந்தபுராணம்.

முன்னொரு காலத்தில் மூவுலகங்களிலும் வாழ்ந்தவர்கள் வாழ்க்கையில் சீரகெட்டுப் பழுது ஏற்பட்டது. அறம் புறம் ஆனது. அடிதலை மாறியது. சீரமை கெட்டது; நேர்மை குன்றியது. ஒழுக்க விழுமியங்கள் மறைந்துவிட்டன. வேதங்கள் உதாசீனம் செய்யப்பட்டு விட்டன. மனிதம், மனிதத்துவம், மனிதாபிமானம் யாவும் மலையேறிவிட்டன. சமநிலை ஒரு பக்கம் சாய்ந்துவிட்டது. அதர்மம் ஆட்சிபீடத்தில் கொலு வீற்றிருந்தது. இந்த அவலநிலையைக் கண்டு, தேவர்களும் முனிவர்களும் அதிர்ச்சியும் மருட்சியும் அடைந்து திகைத்தனர். இந்தத் துர்ப்பாக்கிய நிலைமையை, மேற்படி கந்தபுராணப் பாடல் நன்கு சித்திரித்துக் காட்டுகிறது.

உலகின் சீரகெட்டு; அதனால் உலகின் அழகு பறிபோன, அவலநிலையில் மூவுலகங் களையும் மீளவும் அழகுசெய்ய வேண்டி உதித்தனன் அழகன் முருகன்.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்கரங்கள் பன்னிரெண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

என்பது கந்தபுராணம் தரும் செய்தி. மேலும், வேதங்கள், உபநிடதங்கள் ஆகிய வற்றினாலும்; மனம், மொழி, மெய் என்பவற்றினாலும் அளந்தறியமுடியாத; எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த, என்றும் உள்ள மூலப்பரம்பொருள்; ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியான உள்பொருள், மெய்ப்பொருள்; ஆனந்தமயமான ஆதிசிவம் என்பதையும்; அந்தச் சிவபரம்பொருளும் முருகனும் ஒருவரே; வேறல்லர் என்பதையும் கந்தபுராணம் வலியுறுத்துகிறது.

மறைகளின் முடிவால், வாக்கால், மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் விமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றிஅருள் ஒடுசரவணத்தின்
வெறிகமழ் கலப்போதில் வீற்றிருந்து அருளினானே.

வானிலையைவிட அதிக வேகமாய் மாறுகிறது மனிதனின் மனநிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும்கொண்டு ஆறு திருமேனிகளுடன், ஒன்றுகூட்டி அணைத்து ஒரு திருமுருகன் ஆக உருவாக்கியவர் அன்னை பார்வதிதேவி. அதனால் அக் கடவுட் குழந்தைக்குக் கந்தன் என்ற திருநாமம் அமையப்பெற்றது. "ஸ்கந்த" என்ற வடமொழிச் சொல், "பொருத்தப்பெற்ற" என்ற பொருள் தருவது, நோக்கற்பாலது. வடமொழியில் எழுதப்பட்ட கந்தபுராணத்திற்கு "ஸ்கந்தபுராணம்" என்று பெயர் தரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது பதினெண்புராணங்களுள் ஒன்று ஆகும்.

சரவணந் தனில்தனது சேய் ஆறுருத்தனையும்
இருகரங்களால் அன்புடன் எடுத்தனள், புல்லித்
திருமுகங்களோர் ஆறு பன்னிரு புயம் சேர்ந்த
உருவம் ஒன்று எனச் செய்தனள் உலகம் ஈன்றுடையாள்

"..... மூவிரு வடிவம் ஒன்றாகிக்
கந்தன் என்ற பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"

முருகன் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவன். அதனால் சிவனார் மைந்தன்; ஆண்மகன்.

ஆறு ஆண் குழந்தைகளும் பார்வதி தேவியால் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட பின்னரே; ஆறுமுகன்; கௌரிகுமாரன், உமாசுதன் ஆகிய திருநாமங்களைப் பெற்றான்.

கந்தநம, ஐந்துமுகர் தந்த முருகேச நம, கங்கையுமைதன்
மைந்தன் நம, பன்னிரு புயத்த நம, நீபமலர் மாலை புனையும்
தந்தை நம, ஆறுமுக வாதி நம, சோதி நம, தற்பரமதாம்
எந்தை நம, என்றுமிளையோய் நம, குமாரநம என்று தொழுதார்.

-கந்தபுராணம்.

ஐந்துமுகர்: சிவன், முருகேசன், முருகன், கங்கையில் வடிவம் பெற்றவன்: காங்கேயன் என்றும்; இளையோய்- குமரன். இப்பெயர்களால் முருகன் அழைக்கப்படுவதற்குரிய காரணங்கள் ஆகும்.

"ஆகையால் எம்பிரான் நீ, யருவுரு ஆகி நின்ற
ஏக நாயகனே யாகும்"

-கந்தபுராணம்.

முருகன் தேவர்களுக்குக் காண்பித்த விசுவரூப தரிசனம்; மேலும் சிவனும் முருகனும் ஒருவரே; வேறல்லர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

முருகன் அவதார நோக்கம்

இந்த உலகத்தை உய்விக்கும் பொருட்டே முருகனின் அவதாரம் நிகழ்ந்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது. சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மூவரும் முறையே ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களின் கூட்டு மொத்தம். ஆணவம் இருள்மயமானது; ஆனால் அதன் தன்மை இருளிலும் கொடியது என்கிறது திருவருட்பயன் என்னும் சைவசித்தாந்த நூல். இருள் தன்னுள் மறைந்துள்ள பொருள்களைக் காட்டாது. ஆனால் தன் உருவத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும். ஆனால், ஆணவம் ஆகிய இருள், தன்னையும் காட்டாது, தன்னையும் மறைத்து நிற்கும். ஆணவத்தை அழித்து ஒழிப்பது என்பது மிகச் சிரமம்.

அத்தகைய கொடிய இருள்மயமான ஆணவத்தின் மொத்த வடிவமாக விளங்கிய சூரபத்மன் மாயங்கள் செய்வதில் மகா வல்லவன். அவனைக் கண்டு, அழிப்பது, அத்துணை சுலபமான காரியமல்ல.

சூரபத்மனின் இருளாட்சியை ஒழித்து அவனின் கோரப்பிடியிலிருந்து, உலகத்தவரை விடுவித்து, ஆங்கு அருளாட்சி செய்வதற்காகவும், நீதிவழுவா நெறிமுறையில் செங்கோலாட்சி நிறுவுவதற்காகவும்; பிரம்மமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக் கொண்டு, கருணை நிறைந்த ஆறுமுகங்களுடனும், அபயம் அளித்து அருள் வழங்கும் பன்னிரு திருக்கரங்களுடனும் அழகு எல்லாம் திரண்டு உருவாக, பேரொளிப் பிரகாசத்துடன் முருகப் பெருமான் திருவவதாரம் செய்தார்.

சூரசம்ஹாரம் என்பது ஆணவ ஒழிப்பு; இருளை அகற்றி, ஒளி பிரகாசிக்கச் செய்தல்; அறியாமையை அகற்றி, அறிவைப் பிரகாசிக்கச் செய்தல் ஆகும். ஆயிரம் கோடி சூரியர்களின் பிரகாசத்தையும் வென்ற ஒளிப்பிழம்பு ஆகிய முருகப் பெருமானின் பிரகாசத்திற்கு எதிரே எந்த ஒரு இருளினால்த்தான் தாக்குப்பிடிக்க முடியும். முருகப் பெருமானை மனம், மொழி மெய்யினால் வணங்கி, வழிபட்டு, எம்மிடம் உள்ள தீய குணங்களை அகற்றி, நல்ல குணங் களையும் நற்பண்புகளையும் வளர்த்து; நல்லன செய்து, நாமும் நல்வாழ்வு வாழ்ந்து, மற்றையவர்களையும் நல்வாழ்வு வாழச் செய்வோமாக.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

இக்காலத்தில் மனிதர்களின் மனதில் மாறுபட்ட இயல்புகள் தென்படுகின்றன. எந்தச் செயலானாலும் மனச்சாட்சியுடன் இணைந்த செயற்பாடாக இருக்கவேண்டும். மனச்சாட்சிக்குப் புறம்பானவற்றை அறவே செய்யக்கூடாது. எல்லை மீறிய ஆசைகளையும், தாழ்வு மனப்பான்மையையும் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். மனம் ஒன்று நினைக்க செயல் வேறுவிதமாக அமைவது அழகல்ல. இப்படியான தகவல்கள்தான் நமது புராண இதிகாசங்களிலே ஒளிந்திருக்கின்றன. வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் வேளையில் மனச்சாட்சியுடன் இணைந்து செயற்படுங்கள். அதுதான் வெற்றியளிக்கும். ஆபாசங்களுக்கு முதலிடம் கொடுக்காமல் பண்புக்கு முதலிடம் கொடுங்கள். ஆபாசம் சில காலத்தின்பின் அவலட்சணமாகிவிடும். ஆனால் பண்பு என்றுமே பயனுடையதாகவே இருக்கும். திருமணம் நிகழ்ந்த பின்னர் இணையைத் துண்டிக்காமல் இருப்பதில் கவனம் செலுத்தவேண்டும். ஆசைகளை விட்டுக்கொடுத்து சமரசம் அன்பைப் பேண வேண்டும். துண்டிப்பை ஏற்படுத்தச் சொல்லும் உங்களுடைய மனதின் பரிந்துரைகளை மறுக்கவேண்டும். அந்த மனவலிமைதான் உங்களது வாழ்க்கையைப் பசுமையாக்கும். *-நற்சிந்தனை-*

தவறுகளுக்கு அஞ்சுவது வேறு, தண்டனைக்கு அஞ்சுவது வேறு. இன்று தண்டனைகளுக்குத்தான் மக்கள் அஞ்சுகின்றனர். தவறுகளுக்கல்ல. தவறுகளைச் சர்வ சாதாரணமாகச் செய்துவிடுகிறார்கள்.

உங்களை நீங்களே மதியுங்கள். அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் எண்ணமே உங்கள் எதிர்காலம்

– திரு இ. சிவயோகநாதன் அவர்கள் –

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

இக் கூற்றை வள்ளுவப் பெருமான் பல ஆண்டுகளுக்கு முன் கூறிச் சென்றார். விஞ்ஞான ரீதியில் இதைப் பார்ப்போமானால் உண்மையான விளக்கம் கிடைக்கும்.

வாழ்க்கை என்பது இன்பமும் துன்ப மும் கூடி வருவது. இது இயற்கை நியதி. மனித வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பான ஒன்று. வெற்றி தோல்வி வாழ்க்கை யின் சுழற்சியில் வந்தே தீரும்.

ஒருவன் முன்னேற வேண்டுமானால் தற்போதைய நிலையை மாற்றி பயணிக்க வேண்டும். ஒரே நிலையில் நிற்பது ஆரோக் கியமானது அல்ல. சோர்வு மனப்பான்மையை விரட்டி சுறுசுறுப்பு தன்மையை வளர்க்க வேண்டும்.

எல்லோருக்கும் தங்கள் நோக்குத் தெரியும். ஆனால் எப்படி அணுகுவது என்று தெரியாது. குறிக்கோள் விடாமுயற்சிதான் செல்லும் பாதைக்கு அடையாளம். நல்லதற் கும் கெட்டதற்கும் அவரவரே பொறுப்பாகும். மனிதனின் அறிமுகமாகிய சோதனைகள் வேதனைகளைத் தாண்டி உற்சாகத்துடனும் துணிவுடனும் செயற்படவேண்டும்.

நீ முடியும் என்று நினைத்தால் உன் னால் முடியும். முடியாது என்று நினைத்தால் உன் முடிவு சரி - அதாவது உன்னால் செய்ய முடியாமலே போய்விடும்.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என வள்ளுவர் கூறுகிறார். தொடர்ந்து "அன்பின் வழியது உயிர்நிலை அ.்.தியார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என அறிவுரை கூறுகிறார். அன்பு வழியில் நின்று வாழ்க் கையை நடத்த வேண்டும். அது பிறருக்கும் அவனுக்கும் நல்லது. இது அமைதியான வாழ்க்கைக்கு உதவுகின்றது.

எண்ணம் நல்லதென்றால் நல்லதே நடக்கும். பின் ஏன் கெட்டதை பொறாமையை நாட வேண்டும். எண்ணக் கருத்தை செயற் படுத்த நாமே காரணமாகும்.

மனத் தத்துவத்தின்படி முதலில் உன்னையே விரும்பிக்கொள். உன்னையே சுய விமர்சனம் செய்து குறை நிறைகளை ஒத்துக்கொண்டால் தன்னம்பிக்கையும் சந் தோஷமும் சேரும்.

தனிமையில் இருக்கும்போது மனதில் வருவதைத் தாளில் குறித்துக்கொள்ள வேண் டும். குறித்துக் கொண்டால் மனதில் உறுதி யாகப் பதிந்துவிடும். பெற்ற அனுபவங்களான வெற்றிகள், தோல்விகள், திருப்புமுனைகள், ஆசைகள், சாதனைகள், ஏமாற்றங்கள் போன் றவை எதிர்கால பயணத்திற்கு உதவும். இத னால் செய்யவேண்டிய காரியங்கள் மிகவும் இலகுவில் செய்து முடிக்கலாம். ஒரு காரியத் தைச் செய்யவேண்டுமாயின் அதைப் பல கோணங்களில் சிந்தித்து முடிவெடுத்து செயற்பட வேண்டும்.

அறிஞர்கள் கூறியபடி இன்னொருவரின் மனோநிலையை மாற்ற முடியாது. ஆனால் எங்கள் மனோநிலையை மாற்றலாம். தன்னைத் தானே குறைத்து எடை போடும் போக்கினை தூக்கி மனதிலிருந்து எறிய வேண்டும். சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல் உன்னுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் திறமையை வெளியில் கொண்டுவர வேண்டும். இப்படியான திறமையை முழுமை யாகப் பயன்படுத்தியவர்கள் உலகில் பல சாதனைகளைப் புரிந்து புகழுடன் இருக்கிறார் கள். மற்றவரைக் குறை குற்றம் காண்பதை விடுத்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பல இடங்களில் குடும்ப வேலை காரணமாக நேரம் செல்கிறது. இதனால் தங்களைப் பற்றி சிந்திப்பதே இல்லை. ஆனால் உன்னைப் பற்றியும் சிறிது சிந்திக்க வேண்டும் இது சுயநலம் என்று கூறமுடியாது.

அவரவர் உடலுக்குத் தகுந்த உணவு எடுக்கவேண்டும். உடற்பயிற்சியும் நடைப் பயிற்சியும் அவசியம் என மருத்துவம் கூறுகிறது. ஓய்வு எடுப்பதற்குப் பல வழிகள் உண்டு. மன அழுத்தங்கள் குறைய சுவாச பயிற்சியி னாலும், யோகப் பயிற்சியினாலும் ஆரோக்கிய மாக இருக்கலாம்.

மனிதனுக்கு வேண்டிய அவசிய தேவை சக்தி கொடுக்கும் உணவு வகைகளை உண்ண வேண்டும். சுற்றாடல் தனிப்பட்ட பிரச்சனைகள் போன்றவற்றை அகற்றினால் நிம்மதியும் சக்தியும் அதிகரிக்கும். நம்பிக்கை யுடன் மனது வைத்தால் முடியும்.

தேவையற்ற செலவுகளை கட்டுப் படுத்தி சிக்கனமாக வாழ்ந்து சேமிக்கும் பழக் கமும் வேண்டும். உன் பாதைக்கு தடங்கல் எது என்று தெளிந்து முன்னோக்கி நகர வேண்டும்.

வாழ்க்கையைச் சந்தோஷமாக அனு பவிக்க வேண்டும். சிரிப்பு, விளையாட்டுத்தனம் ஓய்வு உடலுக்கும் மனதிற்கும் நல்லது. ஆகவே சோர்வில்லாமல் ஊக்கத்துடன் செயற் பட்டால் ஆக்கம் அவன் இடத்திற்குப் போய்ச் சேரும். இதை வள்ளுவர், "ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடைய னுழை" என்கிறார்.

எங்கள் எண்ணம் விஞ்ஞான ரீதியில் மனதில் உடலில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அந்த எண்ணம் உற்சாகத்தையும் கொடுக்கும் மாறாக நினைத்தால் சோர்வைத்தான் கொடுக் கும்.

ஆகவே எண்ணத்தை ஒருமுகப்படுத்தி ஆக்கபூர்வமாக உற்சாகத்துடன் வாழ்க்கைப் பயணத்தை முன்னேற்றிச் செல்வோமாக.

இந்த உலகத்திலே நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமானவர்கள் இல்லற வாழ்க்கையின் இச்சைக்குள் அகப்பட்டு வாழவே விரும்புகிறார்கள். ஆனால் தொல்லைகளும் துன்பங்களும் ஏற்பட்டுவிட்டால் மட்டும் வேதனை அடைகிறார்கள். உபத்திரவங்களும் தொல்லைகளும் இல்லற வாழ்க்கையில் ஏற்படாமல் இருப்பதென்பது நடக்காத காரியம். இயற்கைக்கு மாறானதும்கூட. உண்மையில் அவையெல்லாம் நமது மேன்மைக்காகவே வாழ்க்கையில் வந்துபோகின்றன. நோயாளிக்கு ஆரோக்கியம் உண்டாக்குவதற்காக கசப்பான மாத்திரைகளை டாக்டர் தருவது போன்றதே அத்துன்பங்களும் சோதனைகளும். துன்பங்கள்தான் நமக்கு நேர்மையான வழி காட்டிகள். அவற்றால் நமது வாழ்க்கை செம்மையடையும். சாதாரண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மனிதனுக்கு, அவனைச் சரியான வழியில் வாழச்செய்வதற்கு இத்துன்பங்கள்தான் வழிகாட்டியாக அமைகின்றன. "அமைதியையும் பொறுமையையும் நாம் கற்றுக்கொள்வதற்கான பள்ளிக்கூடம் நமது இல்லறம்தான். இல்லறத்தில் நமக்கு ஏற்படும் வறுமையையும், துன்பங்களையும் பதறாமல் பொறுத்துக்கொள்வதுதான் நாம் இயற்றும் பெருந்தவம்" என்று இல்லறத்தில் வாழ்ந்த ஞானிகள் கூறியுள்ளார்கள்.

தோல்வி, சோதனைகளைக் கண்டு துவண்டுவிடாதீர்கள். அறிவை மென்மேலும் பெருக்கிக்கொள்ள தரப்பட்ட வாய்ப்பே தோல்வியும் சோதனைகளும். -நற்சிந்தனை-

ஆசைப்படுங்கள் தவறில்லை. பேராசையே வாழ்க்கைக்குக் கேடு விளைவிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிநதியில் மூழ்கி வழிவேலைத் தரிசிக்க வாரீர் சந்நிதிக்கு

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

நிம்மதிக்கு ஓரிடம் சந்நிதி. எந்நிதிக்கும் ஏற்ற உற்றபதி செல்வச்சந்நிதி. ஒவ்வொரு வரின் தலைவிதியைக்கூட மாற்ற வல்லது வல்லிநதித் தீர்த்தம். கோடியைக் கூடப் பணிய வைப்பதும், பணிவைக் கோடியாக்குவதும் இங்கு சர்வ சாதாரணமாகும். மாற்றம் நிகழும் அற்புதமே சந்நிதி.

வல்லிநதியே பின்பு தொண்டை மானாறாகப் பெயர்கொள்ள ஏதுவாயிற்று. வல்லிநதியைப் பெருங்கடலோடு சங்கமிக்க வழிசமைத்தவன் தொண்டைமான் அரசன் என்ற காரணத்தால் அன்றுமுதல் தொண்டை மானாறு என்ற பெயர் வரக் காரணமாயிற்று. வல்லிநதி ஓர் ஆச்சர்யமான மகா தீர்த்தம் ஆகும்.

கதிர்காமத்தில் மாணிக்க கங்கை போல கேதீச்சரத்திலே பாலாவிபோல, முன் னேஸ்வரத்தில் தெதுறு ஓயாபோல, மாவிட்ட புரத்தில் கீரிமலைக் கண்டகிபோல தொண்டை மானாறு செல்வச்சந்நிதியிலும் வல்லிநதியாம் தொண்டைமானாறு நீரேரி தொல்லை வினை தீர்க்கும் வல்லநதியாக அடியவர்களுக்கு வரந்தருகிறது.

மருதமும், நெய்தலும், மனிதமும் பொலிகின்ற இடம் தொண்டைமானாறாகும். பரத குலத்தவர்கள் என்பவர்கள் கடற்றொழில் புரிபவர்கள். பக்தி மிக்கவர்கள். பணிவு கொண்டவர்கள். இந்தப் பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்தவர்தான் பரதகுல மூத்த வரான மருதர் கதிர்காமர் என்பவர். இவரது தொழில் மீன்பிடியாகும். தினமும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது முன்னர் "ஐரா வசு" முனிவர் தவம் இயற்றிய பூவரசு மரத் தடியில் வணங்கிய பின்னர்தான் தொழிலை ஆரம்பிப்பது வழக்கம்.

இவரது பயபக்தியை மெச்சிய முரு கப்பெருமான் மருதர் கதிர்காமரைத் தனது அடியவனாக்கவும், அற்புதம் செய்யவும் விரும் பியவராக ஒருநாள் தடுத்தாண்டு கொண்டார்.

ஒருநாள் கதிர்காமர் மீன்பிடிக்கக் கட லில் இறங்கியபோது, இவர் முன்பாக ஒரு சிறுவன் ஒளி பொருந்தியவனாய் அக்கரை யில் தோன்றிய நிலையில் "கதிர்காமா! கதிர் காமா!! இக் கரைக்கு என்னிடம் நீ வா" என்று அழைத்தான். கதிர்காமருக்கு எதுவுமே புரியவில்லை!

"சின்னப்பயலே! என்ன? என்னோடு விளையாடுகிறாயா? நீ கூப்பிட நான் வர வேண்டுமா? வரமாட்டேன் நீ போ" என்றார்.

"கதிர்காமா! கதிர்காமா! நான் சின் னப்பயல்தான். நீயோ பெரிய மனுஷன்தான். அதுதான் உன்னைக் கேட்கின்றேன். இக் கரைக்கு ஒருக்கால் வாவேன்! என்று கனிந்த குரலில் மீண்டும் கூவி அழைத்தான் அந்தச் சின்னப்பயல்.

கதிர்காமர் பெரிய சிரமப்பட்டு, வல்லி நதியில் விழுந்து எழும்பியவராய் கூப்பிட்ட சிறுவனருகே சென்று, சின்னப்பயலே என்ன நீ சொல்லப் போகிறாய் சொல்லு என்று கதிர்காமர் சிறுவனிடம் அதட்டியபோதே, அந்தச் சிறுவனிடமிருந்து மின்சாரம் பாய்வது போன்ற தெய்வீக வாலாயம் கதிர்காமரிடத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவியது. கதிர்காமர் அச்சிறுவனிடம் அடி பணிந்தார். மூர்க்கம் தணிந்தது. அமைதியோடு பணிந்து நின்றார். சிறுவனின் முகம் மனித முகமன்றி ஜோதி வடிவமுகமாக மாறியது.

கதிர்காமர் அச் சிறுவனால் கவரப் பட்டு வசீகரிக்கப்பட்டார். இப்போ கதிர்காமர் சிறுவன் வயப்பட்டார். வார்த்தை அவர் வாயில் வராமல் சொக்கி நின்றார்.

"கதிர்காமா! உனது பக்தியைத் தினமும் நாம் கண்டு ஆனந்தித்தோம். உன்னிடம் ஒரு பெரிய தெய்வீகப் பணியை யாம் தருகின்றோம். யாம் சொல்வதைக் கேட் பாயாக".

"கதிர்காமா! இதோ பார்! பூவரசுமரம்! இதிலே சிறு குடில் கட்டி, வேலை வைத்து வழிபாட்டுடன் பூஜை செய்வாயாக. நாமும் இங்கேயே இருப்போம். எதற்கும் கவலைப் படாதே" என்று கூறிய நிலையில் கதிர்காமர் தன்னிலையை எடுத்துக்கூறலானார்.

"நானோ பரதகுலத்தவன். நான் பூஜை செய்ய அருகதையற்றவன். எனக்கோ மந்திரமும் தெரியாது. தந்திரமும் தெரியாது. என்னை விட்டு விடுங்கள். எனக்கு முடியாது" என்று மறுத்துரைத்தார் கதிர்காமர். சிறுவனும் இவரை விட்டபாடில்லை.

கதிர்காமா! முறையும் வேண்டாம். மறையும் வேண்டாம். குறையும் வேண்டாம். வல்லிநதியில் நீ மூழ்கியபோது உனது குறை கள் எல்லாம் கழுவப்பட்டுவிட்டன. நீ எப்படிப் பூஜை செய்யவேண்டுமென்று கவலைப் படாதே. நான் சொல்வதுபோல் நீ செய்யக் கடவாய். உனது இரண்டு கண்களையும் மூடுவாயாக. நன்றாக மூடிக்கொள்.

இப்போது என்ன தெரிகிறது? சொல்லு! என்ர தம்பி! ஒரு கோவில் தெரி கிறது. இப்போது என்ன நடக்கிறது? சொல்லு! என்ர தம்பி பூஜை நடக்கிறது. அடேயப்பா! அங்கே பூஜையை எப்படிச் செய் கிறார்கள்? வாய்கட்டி மௌனமாகச் செய் கிறார்கள். மந்திரமும் இல்லை. தந்திரமும் இல்லை. கதிர்காமா வடிவாகப் பார்த்துக் கொள்! சரி இப்போது கண்களைத் திற" என்றார்.

கதிர்காமர் கண்களைத் திறந்தார். அடேயப்பா! கதிர்காமம் போய் வந்ததைக் கதிர்காமர் அந்தச் சிறுவனிடம் சொல்லி ஆனந்தக் கூத்தாடினார். என்ன அதிசயம் சுவாமி அங்கு நீ கண்டமாதிரி வாய்கட்டி இங்கும் பூஜை செய்வாயாக என்று அந்தச் சிறுவன் கதிர்காமரிடம் கூறிவிட்டுக் கால்கள் நோகும்படியாகத் தூரச் சென்றவாறு மறைந் தும் கொண்டான்.

கதிர்காமர் திகைத்தார். இது கனவா நனவா என்று திக்குமுக்காடியபடி, வந்த சிறுவனோ எல்லாம் வல்ல முருகப்பெருமானே என உணர்ந்தவராய், அவர் சொல்லிய வாறும், கதிர்காமக்காட்சியில் கண்டவாறும், பூவரச மரத்தடியில் சிறுகுடிலாக இலை குழை ஓலைகளால் வேய்ந்து, வேலினை அந்த இடத்தில் வைத்து வாய்கட்டி மௌன மாகப் பூஜை ஆற்றத் தொடங்கினார்.

பரதகுலத் தொழிலோடு, பூஜையும் ஒழுங்காக நடைபெற்று வரும் நாளில், ஒரு நாள் பூஜை முடிந்து வீடு சென்று சாப்பிட உட்கார்ந்தபோது, ஓர் அசரீரி ஒலித்தது.

"கதிர்காமா! ஆற்றங்கரையில் உள்ள பூவரசு மரத்தடியில் ஒரு அடியவர் கடும் பசியோடு தவமிருக்கின்றார். அவருடைய பசி யைப் போக்கிடுவாயப்பா! அதன்பின் சாப்பிடு வாயப்பா!" என்றதும், கதிர்காமர் தனக்கிருந்த அமுதைப் பானையோடு தூக்கிக் கொண்டு சென்று பூவரசு மரத்தடியில் பார்த்தபோது எவரையும் காணாது தவித்து அழுதார். மீண்டும் அசரீரி ஒலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிர்காமா! நீ கொண்டு வந்த அமுதினை எனக்கு முதலில் படைத்துவிடு. இதோ பார், 65 ஆலம் இலைகள் போடப்பட்டுள்ளன. 63 பேர் பசியோடு வருவார்கள் உனக்கும் எனக்குமாக மொத்தம் 65 ஆலம் இலைகளில் பச்சையரிசிச் சாதமும் பயற்றங் கறியும் தினமும் படைத்து, வந்து வழிபடும் அடியவரைப் பசியாற்றி அனுப்பி வை" என்ற முருகனின் வாக்கும் 65 ஆலமிலை அமுதும், பயற்றங் கறியும் அன்றிலிருந்து இன்றுவரை பக்தியுடன் படைக்கப்பட்டு வருகிறது. வாய்கட்டிச் செய்யும் பூஜையோடு வரமீயும் அன்னதானக் கந்தனாகச் சோறும் பொலிகிறது. சுடரும் ஒளிர்கிறது. சுபீட்சமும் கிடைக்கிறது. 08.08.2021இல் கொடியேறி 22.08.2021 பூரணையில் தீர்த்தமாடுகிறான் முருகன். 21.08.2021இல் தேரேறி ஊர்தோறும் அல்லாதனவற்றை நீக்கி நல்லனவற்றை விதைக்கின்றான். 1985இல் பென்னாம் பெரிய அழகிய சித்திரத் தேர் எரிக்கப்பட்ட பின்னர் இப்பொழுது புதிய மூன்று தேர்களும் திருவீதி வலம் வருகின்றன. மூர்த்தி தல தீர்த்தமோடு எளிமை ததும்பும் அற்புத ஆலயமாகச் செல்வச்சந்நிதி முருகன் திருப்பதி விளங்குகின்றது.

முருகனும் கதிர்காமரும் பேசிய திண்ணையில், இப்போது முருகனும் அடியவர்களும் இருந்து கதைக்கும் பாவனையாகக் கனவிலும் நினைவிலும் போற்றப்படுகிறது.

ஒரு காலத்தில் சந்நிதியின் சுற்றாடலில் 48 மடங்கள் இருந்ததாக வரலாறு சான்று பகரும். இப்பொழுது மீண்டும் சில மடங்கள் தோன்றியுள்ளமை முருக சாம்ராஜ்ஜியத்திற்கு வலுச்சேர்க்கின்றன.

சிறப்பாக சந்நிதியான் ஆச்சிரமம் பெறுமதியாகவும் அறச்சாலையாகவும் சந்நிதியிலிருந்து தென்னிலங்கைவரை மிளிர்கிறது. தர்மம் தினம் தினம் பல்கிப் பெருகுகிறது. திருச்செந்தூர், பொலிகண்டி, சந்நிதி, கதிர்காமம் என முருகனின் பாதார விந்தங்கள் இன்றும் ஆதார வரங்களாகச் சாதனையாக்கப்படுகின்றன.

"மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்ற தத்துவம் முறையாகப் பிரகாசிக்கும், மூன்று சுற்றுப் பிரகாரங்களோடு- அற்புதம் காட்டும், ஆனந்த முருகனாம் அன்னதானக் கந்தனை மனதார நினைந்து உள்ளதே போதுமென்று வாழ்வோமாக.

உலக இன்பங்கள் எதுவாக இருந்தாலும் அவை நிலையற்றவையே. அறியாமையால் ஆசை வருகிறது. ஆசையால் செய்கின்ற செயல் எதுவுமே நிலையாக நிற்பதில்லை. நிறைவேறாத ஆசையால் கோபம் உண்டாகிறது. கோபத்தால் விரோதம் உண்டாகிறது. இதனால் உனக்கு மட்டுமன்றி பிறருக்கும் துன்பம் உண்டாகிறது. எந்த ஒரு செயலை நீ செய்துகொண்டு இருந்தாலும் சரி, இனிமேல் செய்வதாயினும் சரி அதிலும் துறவு நிலை இருக்கிறதென்று கருதிக்கொள். அதாவது இன்று செய்வதை நாளையே இழக்கவும் நேரிடலாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

ஒரு செயல் தீயதென்று தீர்ப்பளிக்கப்பட்ட பின்பும் அதையே செய்வது, உங்கள் ஆன்மாவை அலைக்கழித்து ஊசலாட வைப்பது போன்றதாகும்.

யோசிக்காமல் செய்யும் காரியங்களுக்காக கஷ்டங்கள் உன்வீட்டு வாசலில் காத்துக்கொண்டிருக்கும்.

எண்ணங்கள் அழகானால் வாழ்க்கையும் அழகாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை கடலில் அகப்பட்டு துன்புறும் மக்களுக்கு ஆலயங்கள் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

முன்னோர்களுடைய பண்பாடுகளை-நாட்டின் நாகரிகங்களை அறிவதற்குரிய கருவிகளால் அமைந்தவை சிற்பமும் ஓவிய மும் ஆகும். இவைகளை முன்னோர்கள் கண் எனப் போற்றிக் கடவுள் இயல்புகளையும் சேர்த்து தெய்வம் வீற்றிருக்கும் திருக்கோயில் களை அமைத்து வைத்தார்கள். பேராற்றல் உடைய ஒருபரம் பொருள் உண்டென்பதை யும், அ்து எல்லாப் பொருள்களையும் இயக்கு கிறது என்பதையும் உறுதியாகக் கண்டார்கள். மேலும் விளக்குவதற்கு, கருங்கல்லிலும், பிற உலோகங்களிலும் பல வடிவங்களை அமைத்தார்கள். கோவிலுக்குரிய கோபுரம், மண்டபங்கள், தூண்கள் முதலியவற்றைச் சிற்ப வேலைப்பாட்டுடனும், ஓவியங்களுடனும் அமைத்தார்கள். எழுத்தில் ஒலிவடிவத்தை உணர்த்துவதற்கு வரிவடிவத்தை அமைத்தது போலக் கட்புலனால் காணமுடியாத கட வுளைக் காண வைக்கும் சாதனங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன.

கடவுள் எங்கும் இருக்கிறார் அப்படி யானால் ஏன் ஆலயங்கள் தேவை? கடவுள் எங்குமிருந்தாலும் எமது மனதில் இவ் எண் ணத்தைப் பதிக்க முடியாமல் இருக்கின்றது. நாம் அவருடைய கருணையை நாட வேண் டும். எமது வேண்டுதல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எமது ஆகம சாஸ்திரங்கள் எப்படி இவற்றைச் செய்ய வேண்டுமெனக் கூறுகின் றன. உதாரண வாயிலாக விளக்குவது நன்று. மின் சக்தி எங்குமுண்டு. ஆனால் பெறுவது எப்படி இங்கு மின் இயக்கிகள், மின்மாற்றிகள் தேவை. மேலும் விளக்குவது பொருத்தமாகும். ஒரு பசு மாட்டின் உடல் முழுவதிலும் பால் மறைந்திருந்த போதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும் நிலத்துக்கு அடியில் நீர் இருந்த போதிலும் தோண்டிய இடத்திலே தான் நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் மக்கள் அமைத்த ஆலயங்களில் எமது மனத்தைத் தெய்வீக விக்கிரகத்தில் செலுத்தி இறைவனின் அனுக் கிரகத்தை சுலபமாகப் பெறுவதற்கு ஏதுவாக அமையும். நாட்டின் நலத்துக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் ஆலயங்கள் இன்றியமை யாதனவாகும். வாழ்க்கை கடலில் அகப்பட்டு துன்புறும் மக்களுக்கு ஆலயங்கள் கலங் கரை விளக்கங்களாக விளங்குகின்றன. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" சான் றோர் கூறிய அனுபவ மொழி.

நாம் பிரார்த்தனையின் மூலம் வளர் வோமாக தியானத்தின் மூலம் நம் மனதின் கதவுகளைத் திறப்போமாக. உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நம் மனம், அதன் முழு ஆற்றலையும் பூரணமாகப் பயன்படுத்துமாறு நம்மை எப்பொழுதும் தூண்டிக் கொண்டே இருக்கும்.

முப்பொருளாகிய பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் அறிவிக்குமிடமாக ஆலயம் உள்ளது. சிவலிங்கமே பதியாகவும், ஏறு பசுவாகவும், பலிபீடம் பாசமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. மேலும் உண்மையான அறிவை நாம் பெற வேண்டும். உண்மையான அறிவென்பது ஆன்மீக ஞானமே. பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் "ஆத்ம ஞானம் ஒன்றே ஞானமாகும்" என்றும் அந்த ஞானம் தான் என்னுடைய தெய்வீகத் தன்மை என்றும் கூறியுள்ளார்.

விஞ்ஞான வழியோடு, மெய்ஞான மொழியோடு எமது ஆலயங்கள் பக்தி நிலையை மேலோங்கக் கூடியதாக அமைவது காலத்தின் தேவையாகும். சில ஆலயங்கள் கேளிக்கைக் கூடங்களாகவும் காணப்படுகின்றன என்ற விமர்சனமும் இந்தியாவில் உண்டு. ஆனால் எமக்கு பல ஆலயங்கள் கடவுள் மீது உள்ள நம்பிக்கையை வளர்த்த வண்ணம் உள்ளன. எல்லா நற்குணங்களுக்கும் நம்பிக்கையே ஆதாரம் எல்லா நற்செயல்களுக்கும் நம்பிக்கை உறைவிடம், நம்பிக்கையில் இருந்து "ஓம்" என்னும் மொழி பிறக்கிறது. "ஓம்" என்பது நம்பிக்கையின் மந்திரம்.

மனிதன் இயற்கையோடு இணைந்து வாழவும், இன்ப துன்பத்தை ஏற்கும் மனப் பக்குவத்தைப் பெறவும், உள்ளுணர்வுக் கல்வியால் மட்டுமே முடியும். இக்கல்வியை அளிக்க சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் பல் பரிமாணரீதியில் ஆற்றும் பணிகள் பாராட்டுக்குரியவை. எண்ணமும் செயலும் மென்மேலும் பரந்து விரியும் வண்ணம் எமது மனதைக் கல்வி இட்டுச் செல்ல வேண்டும்.

ஞானச்சுடர் என்ற சமயச் சஞ்சிகை அறிவூட்டும் சஞ்சிகையாக, உடல்நலம், மன நலம், உயிர்வளம் மற்றும் அனைத்து வாழ்க்கை வளங்களும் பெற வழிகாட்டியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆலயங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். பக்தர்கள் தரிசனம் இன்றியமையாதது. பூசைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற வேண்டும். இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் அக்கோயிலைச்சார்ந்து அருள்செய்வான் என்றும் சான்றோர் கூறியுள்ளார்கள்.
உடம்பை நடமாடும் கோயிலாக திருமூலர் கூறியுள்ளார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

(திருமந்திரம்)

எனவே புறக் கோயில்களில் வீற்றிருக்கும் இன்ப வடிவான இறைவனை அன்பினால் வழிபட்டு அக்கோயிலை உள்ளத்திற் கொண்டு வந்து இருத்தி இன்பம் பெறுவோமாக.

உயர்ந்த பண்பாடு என்னும் சிறைக்குள் அடைபட்டு, அதைப் பயில நேர்மை ஒழுக்கம் என்னும் சட்டதிட்டங்களை நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாமெல்லாம் மனிதர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பொருள் இருக்க முடியும். ஆரம்பத்தில் ஒன்றிரண்டுதானே என்று நாம் கவனியாது விட்டுவிடும் கறையான்கள் சிறுகச்சிறுக அவை பெருகி நாளடைவில் மரக்கட்டை முழுவதையுமே செல்லரித்துவிடும். அதுபோல் தீய குணங்களும் சிறிது சிறிதாக நம்மிடத்தில் தொடங்கி நாளடைவில் முழுமையாகவே நம்மை அழித்துவிடும்.

தீய குணங்களை சுலபமாக விட்டுவிட முடியாமலிருக்கும்போது, நல்ல குணங்களை மட்டும் எம்மால் சுலபமாக விட்டுவிட முடிகிறதே. இது ஆச்சரியமல்லவா!

அவமானத்தின் வலி அழகிய வாழ்க்கைக்கான வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்வாய் முருகா

– திரு க. வாகீசன் அவர்கள் –

நீயே எல்லாம் ஆனாய் அன்றே
நீயே தஞ்சம் என்றுணர்வாய் மனமே
நீயே வருவாய் நோயைத் தீர்ப்பாய்
நீயே அபயம் என்றருள்வாய் குகனே.

என்னை அறிந்து எனக்குணர்த்தி
என்னை அறிய வைத்தாய் உன்கருணை
என்னை எனக்களித்த உன்பெருமை
என்னை பாடவைத்து அருள்வாயே.

முன் வரும் துன்பங்கள் உன்முன் அகல
முன் துணைவந்து அருள வேண்டும்
முன் வினைப் பாவம் நீக்கி
முன் நிற்பாய் நீயே கதியென்று முருகா.

ஆறுதலை உடையவனே
ஆறுதல் இல்லை என்று
ஆறுதலை நாடி வந்தோம்
ஆறுதலே நீ என்று அருள்வாய் முருகா.

நிலையில்லா உலகினில்
நிலையில்லா வாழ்க்கையின்
நிலையறிய நீ நடத்தும் நாடகம்
நிலையில்லை என்றுணர அருள்வாய்.

நெற்றிக் கண்ணிலிருந்து வந்தவனே
பற்றுள்ள உலகியலில்
பற்றற்று உன் வாசல் நாடி வர
தொற்றுள்ள உலகியலை மாற்றிவிடு.

தேற்றுவாரின்றி தெருவோரம் நாமெல்லாம்
தொற்றுக் கிருமியுடன் உலாவுகின்றோம்
தேரேறி வரும் நாளில் முருகா
தேற்றிவிடு கன்ம நோய்களையெல்லாம்.

தீர்வில்லா எம் துன்பங்கள் போக்கவே
தீர்வாக உன் திருவருட்பார்வை இருக்கட்டுமே
தீராத நோயெல்லாம் தீர்க்கவே
தீர்த்தத் திருநாளில் திருவருள் தருவீரே.

மனம் அழகானால் வாழ்க்கையும் பூவனம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் தீர்க்கும் செல்வச்சந்நிதி

அழகே உருவான செல்வச் சந்நிதியான்
அமைந்த இடமோ அன்றும் இன்றும்
நோய் தீர்க்கும் மருத்துவ அமைவாகும்
நோய் கண்டால் கழுவிட ஆற்றுநீர்
உடல் ஆரோக்கியத்தைக் காத்திட
அன்புமான் மகள் வள்ளிக் கேணி
தீர்த்தமாட மருந்து நீர் மாணிக்க
கங்கை அண்ணன் ஆனைமுகன் முன்னே.

ஆற்றங்கரை யாம் தொண்டைமானாறு அருகே
காற்று வாங்கி இருக்கப் பிணி ஓடிடும்
வீதி எங்கும் விதம் விதமாய் மருந்து மரங்கள்
பார்ப்பதற்கு மரங்களே ஆனால்
அவை மருத்துவக் குணம் கொண்டவை
அரசொடு ஆல் ஆங்கே
வேம்பொடு வேங்கை பனை தென்னை
ஈ(இ)லுப்பை அண்டியே மருது
பூவரசுடன் பூமரங்கள் காணீர் இன்னும்
பூதாரமாக புண்ணிய பூமி செல்வச்சந்நிதி.

நீறொடு சந்தணம் கமழ
தீரா நோய் தீரும் அப்பா
பசிப் பிணிக்கும் பக்குவமாய் ஆச்சிரமம்
புசித்திட அமுதுண்டு ஐயா
படுத்துறங்கிட மண்டபமும் மடமும்
பரம்பொருள் தேசிகருக்குண்டையா
எரியும் விளக்கு கெண்ணையே மருந்து காணீர்
எப்படிச் சொல்வது செல்வச் சந்நிதியானை.

ஐயன் அரவணைத்தே அஞ்சாதே
ஐயமின்றிப் பயணம் செய்யலாம்
அடாவடி செய்தால் அன்புடன்
அடக்க செல்வச் சந்நிதியான்
சந்நிதியான் தாழ் சரணம் என்ற எவரும்
தவறிப் போன தில்லை
ஆணவம் காட்டியோர் அடங்கி
ஒடுங்கி நிற்கும் ஆலயம் சந்நிதி.

– ம. கணேசலிங்கம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org